www.padippakam.com


# நற்றமிழ்

விலை உரு 6.00 இலக்கிய இலக்கணத் திங்களிதழ்


தோள்கள் உடையவர்கள் ஒன்றுபடுங்கள்–புதுத்
தோற்றம் விழைபவர்கள் ஒன்றுபடுங்கள் - அறிஞர் சாலை இளந்திரையனார்


ஆண்டு-ரு திங்கள்-கக தி.ஆ.உ0ருசு சிலை (மார்கழி) (15-12-2005)

ஆசிரியர் : 'தமிழ்மாமணி' புலவர் **மு. இறைவிழியன்**

இணையாசிரியர்கள்: புலவர் **அரங்க. நடராசன்**, புலவர் **செ. இராமலிங்கன்**


## தமிழ்மாமணி, கலைமாமணி விருதாளரின் பாராட்டு விழா



தமிழ்மாமணி, கலைமாமணி ஆகியோர்க்குத் திங்கள் தோறும் ஆயிரம் உருவா ஊக்கத் தொகையாக வழங்குவதாக அறிவித்த புதுவை மாநில முதல்வர்க்கும் எதிர்க்கட்சித் தலைவர்க்கும் விருதாளர் சார்பில் 17-11-2005 இல் புதுவைத் தமிழ்ச் சங்கத்தில் பாராட்டு விழா நடைபெற்றது. தமிழ்மாமணி மன்னர்மன்னன், தமிழ்மாமணி சீனு. இராமச்சந்திரன், தமிழ்மாமணி கோவிந்தசாமி, தமிழ்மாமணி அரிமதி தென்னகனார், தமிழ்மாமணி இறைவிழியன் மற்றும் கலைமாமணிகளும் மாண்புமிகு முதல்வர் ந. அரங்கசாமி அவர்கட்குப் பரிசினை வழங்குகின்றனர்.

வாழிய செந்தமிழ் வாழ்கநற் றமிழர்
வாழிய பாரத மணித்திரு நாடு.
-பாரதியார்

எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
இங்குள தமிழர் ஒன்றாதல் கண்டே !
-பாவேந்தர்

படிப்பகம்

www.padippakam.com



# குற்றம் புரிந்த குசுபுவும் கொம்பு முளைத்த சுகாசினியும்

"நான் இந்த நாட்டுக் குடிமகன். எனக்குத் தெருவில் உருண்டு செல்ல உரிமையிருக்கிறது" என்று கூறி உருண்டு சென்றானாம் ஒரு கருத்துக் குருடன். "நானும் இந்த நாட்டுக் குடிமகனே, எனக்கும் உரிமையிருக்கிறது. எனது சரக்குந்தை நடுத்தெருவில் ஓட்டிச்செல்ல எனக் கூறி நடுத்தெருவில் உருண்டவன் மேல் ஏற்றிச் சென்றானாம் மற்றொருவன்.

"நான் இப்படி வாழ்கிறேன்" என்று கூறுவதோ "என்னைப் போன்ற நடிகைகள் இப்படி வாழ வேண்டும்" எனக் கூறுவதோ கூட ஏற்கக் கூடியதாகலாம், ஆனால் பண்பாட்டின் அடிப்படையில் வாழ நினைக்கும் மொத்த பெண்களுக்கும் அறிவுரை கூற இந்தக் குசுபு யார்?

தமிழர்கட்குக் கொம்பு முளைக்க வேண்டுமாம். கொம்பு முளைத்தால் விளைவு என்னவாகும்? இத்தகு வன்முறையைத் தூண்டும் கருத்தைக் கூறிய சுகாசினியைக் காவல்துறை என்ன செய்திருக்க வேண்டும்? திரைத் துறையில் சில படங்களில் நடித்துவிட்டால் போதும் உலக அறிஞர்களாகக் கருதிக் கொண்டு அறிவுரை கூறக் கிளம்பி விடுகின்றனர்.

குசுபு கூறிய அதே கருத்தின் ஒரு பகுதியைத் தான் தங்கர்பச்சான் தொழில்துறையில் ஏற்பட்ட தொல்லையினால் காரணமாகக் கூறியபோது இந்தக்குசுபு மனோராமா அம்மையாரையும் சேர்த்துக் கொண்டு ஆடிய ஆட்டம் எவ்வளவு? பொது இடத்தில் அவரை மன்னிப்புக் கோரவைத்த கொடுமை என்ன?

இன்று அதே கருத்தை விளக்கமாகப் பேசியுள்ளார் குசுபு. இஃது எப்படிக் கருத்துக் கூறல் ஆகும். ஆண்டாண்டுக் காலமாகக் கட்டிக் காத்துவரும் பண்பாட்டைச் சீரழிக்கக் காட்டப்படும் வழியல்லவா இது. எனவே தான் நாடே ஒட்டு மொத்தமாக எதிர்க்கிறது. பிற மாநிலத்தில் இருந்து வருபவர் வளமாக வாழும் நிலையோடு நிறுத்திக் கொள்ளல் வேண்டும். தமிழ்ப்பண்பாட்டைப் பற்றிப் பேசுதல் கூடாது. இதே போல்தான் அரசியலிலும் மொழித்துறையிலும் மூக்கை நுழைக்கின் றனர் சிலர். இந்த நாட்டில் எவரும் எங்கும் வாழும் உரிமை உண்டு. ஆனால் தமிழர் அல்லாதார் தமிழ்நாட்டு அரசியலில் தலையிட்டுத் தலைமை யேற்றுத் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்குத் தடையாக இருத்தலை நிறுத்திக் கொள்ளல் வேண்டும். அது போலவே தமிழ் உணர்வே இல்லாத பிற மொழியினர் தமிழைக் கற்றுவிட்டதாலேயே தமிழ் வளர்ச்சிக் குழுக்களில் இடம் பிடித்துத் தமிழ் வளர்ச்சிக்கு ஊறு செய்தலைக் காண்கிறோம். இதனையும் நிறுத்திக் கொள்ளல் வேண்டும். பல்வேறு மொழி, இனங்கொண்ட இந்நாட்டில் அவரவர் இனம் மொழி பற்றி உரிமையுடையார் மட்டும் பேசுதலே இந்த நாட்டின் ஒற்றுமைக்கு உகந்ததாகும். இன்றேல் காலம் அன்னார்க்குச் சரியான பாடம் புகட்டும்.

www.padippakam.com



# கலிப்பாப் பற்றித் தொல்காப்பியர் கூறுவன

கலைமாமணி நூற்கடல் தி.வே. கோபாலய்யர்

ஒத்து மூன்று அடுக்கி வரும் தாழிசையும், எல்லா அடிகளும் ஓசையானும் சீரானும் ஒத்துவரும் மண்டிலயாப்பும், ஓரடி ஒருசீர் குறைந்து வரும் குட்டமும், ஒரோவழி இருசீர் குறைந்து வரும் குட்டமும் கலிப்பாவிற்கு உரியனவாக வருதற்கு ஒத்தன. கலிப்பா நேரடி எனவும்படும்

**ஒத்தா ழிசையும் மண்டில யாப்பும்**
**குட்டமும் நேரடிக்கு ஒட்டின என்ப - 115**

தரவு என்னும் கலிப்பாவின் முதல் உறுப்பு சீர்குறைந்த அடியை உடையதுமாகும்.

**குட்டம் எருத்துஅடி உடைத்தும் ஆகும் - 116**

மண்டிலமும் குட்டமும் ஆசிரியப்பாவின் அகவலோசை இயல்பினவாய் வரும் எனவே, தாழிசை கலியோசை பெற்று வரும்.

**மண்டிலம் குட்டம் என்று இவை இரண்டும்**
**செந்தூக்கு இயல என்மனார் புலவர் - 117**

தொல்காப்பியனார் கலிப்பா நான்குவகைப்படும் என்று குறிப்பிடுகிறார். அவையாவன ஒத்தாழிசைக்கலி, கலிவெண்பாட்டு, கொச்சகக்கலி, உறழ்கலி என்பனவாம்.

**ஒத்தாழிசைக்கலி கலிவெண் பாட்டே**
**கொச்சகம் உறழ்எனக் கலிநால் வகைத்தே - 130**

அவற்றுள் ஒத்தாழிசைக்கலி இருவகைப்படும் என்கிறார்.

**அவற்றுள்,**
**ஒத்தா ழிசைக்கலி இருவகைத்து ஆகும் - 131**

ஒத்தாழிசைக்கலியின் முதல்வகைத்தாகிய அகநிலை ஒத்தாழிசைக்கலி தரவு, தாழிசை 3, தனிச்சொல், சுரிதகம் என்ற நான்கு உறுப்புக்களை உடையது.

தரவு என்ற உறுப்புக்குச் சிறுமை நான்கடி, பெருமை பன்னிரண்டடி, ஒரோவழி பன்னீரடியின் இகந்தும் வரும்.

தாழிசை தரவின் அடிகளைவிடக் குறைந்த அடிகளை உடையனவாய் வரும். தாழிசையின் சிறுமை இரண்டடி. பெருமை நான்கடி. ஒரோவழி மிக்குவரினும் தரவின் அடியைவிடக் குறைந்த அடிகளை உடையனவாகவே வரும்.

மூன்று தாழிசைகளையும் அடுத்துத் தனிச்சொல் என்ற உறுப்பு வரும். தரவு முதலிய உறுப்புக்களால் கூறப்பெறும் பொருள்களை

www.padippakam.com



அடக்கி ஒத்தாழிசைக்கலியின் இறுதி உறுப்பாக அமையும் சுரிதகம் போக்கு எனவும் வைப்பு எனவும் வழங்கப்படும். அது தரவு அடியை ஒத்தோ அதனினும் குறைந்த அடிகளை உடையதாகவோ வரும்.

ஒரேவழி மிக்கு வரினும் இழுக்காது என்பனவே தொல்காப்பியம் குறிப்பிடும் அகநிலைஒத்தாழிசைக்கலி இலக்கணமாகும்.

**இடைநிலைப் பாட்டே தரவு போக்கு அடையென**
**நடைபயின்று ஒழுகும் ஒன்றுஎன மொழிப - 132**
**தரவே தானும் நாலடி இழிபாய்**
**ஆறிரண்டு உயர்புஎன்று ஏறவும் படுமே - 133**
**இடைநிலைப் பாட்டே,**
**தரவு அகப்பட்ட மரபின என்ப - 134**
**அடைநிலைக் கிளவி தாழிசைப் பின்னர்**
**நடைநவின்று ஒழுகும் ஆங்குஎன் கிளவி - 135**
**போக்கியல் வகையே வைப்பு எனப்படுமே - 136**
**தரவுஇயல் ஒத்தும் அதன்அகப் படுமே**
**புரைதீர் இறுதி நிலைஉரைத் தன்றே - 137**

பாடின்றிப் பசந்தகண் (கலி 16) தரவு நான்கு அடியான் வந்தது.
வயக்குறு மண்டிலம் (கலி 25) தரவு பன்னிரண்டு அடியான் வந்தது.
அரிதாய அறன்எய்தி (கலி 11) தரவு ஐந்து அடியான் வந்தது.
மணிநிற மலர்ப்பொய்கை (கலி 74) தரவு ஆறு அடியான் வந்தது.
வீ அகம் புலம்ப (கலி 46) தரவு ஒன்பது அடியான் வந்தது.
நீர்ஆர் செருவில் (கலி 75) தரவு பதின்மூன்று அடியான் வந்தது.
அரிதே தோழி நாண் நிறுப்பாம் (கலி 137) தரவு ஏழடி - தாழிசை ஐந்தடி.
படைபண்ணிப் புனையவும் (கரி 17) சுரிதகம் தரவொடு ஒத்து வந்தது.
பாடின்றிப் பசந்த கண் (கலி 16) சுரிதகம் தரவின் மிக்கு வந்தது.
செருமி சினவேந்தன் (கலி 13) சுரிதகம் தரவின் குறைந்து வந்தது.

- தொடரும்

## முதுபேரெழுத்தாளர் வல்லிக்கண்ணன் அவர்களின் வாழ்த்து

தமிழ்மாமணி விருது தங்களுக்கு அளிக்கப்பட்டிருப்பதை 'நற்றமிழ்' இதழ் மூலம் அறிந்து மகிழ்கிறேன். வாழ்த்துக்கள். தங்கள் சீரிய தமிழ்ப்பணி மேலும் சிறப்புற்று வளர்க.



# பொறிஞர் ந. மு. தமிழ்மணி அவர்களின் இல்லத் தூயதமிழ்த் திருமணம்

தி.ஆ. உ0ங.சு நளி ரு-ஆம் நாள் (20-11-2005) ஞாயிறன்று புதுச்சேரி ஆனந்தா திருமண நிலையத்தில் புதுச்சேரிக் கதிர்காமம் பொறிஞர் ந.மு. தமிழ்மணி அவர்களின் அண்ணார் நினைவில் வாழும் ந.மு. வேங்கடாசலம் - வசந்தா இணையரின் மகன் செல்வன் வெ. இளங்குமரன் புதுச்சேரிச் செல்லப்பெருமாள்பேட்டை, திரு. இர. ஞானமணி - சரசுவதி இணையரின் மகள் செல்வி ஞா. ஏமலதா ஆகிய இருவருக்கும் தமிழ்மாமணி புலவர் மு. இறைவிழியன் தலைமையில் தஞ்சை பெ. மணியரசன் அவர்கள் மணவினை நிகழ்த்தினார். புதுச்சேரி மாநில முதல்வர் மாண்புமிகு ந. அரங்கசாமி அவர்கள் மணமக்களை வாழ்த்தினார். சான்றோர் பலரும் மணமக்களை வாழ்த்தினர். திருமண அழைப்பிதழில் பிறமொழி எழுத்து ஒன்று கூட இடம்பெறாமல் அச்சிட்ட பொறிஞர் ந.மு. தமிழ்மணி அவர்களை நற்றமிழ் பாராட்டுவதுடன் நற்றமிழ் வளர்ச்சிக்கு மணமக்கள் சார்பில் தரப்பட்ட உ௹. ஆயிரம் தொகைக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

-ஆசிரியர்.

---

# புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்

(புதுவை அரசு நிறுவனம்)

**112, காமாட்சியம்மன் கோயில் வீதி, புதுச்சேரி – 605 001.**

புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்தில் புதன் அரங்குகளில் நவம்பர் 2005 முதல் ஏப்ரல் 2006 வரை கீழ்க்கண்டவாறு "நானும் தமிழும்" / "திங்கள்தோறும் இருகவிஞர்கள்" / கருத்தரங்க / இசையரங்க நிகழ்வுகள் அமையும் :-

28-12-2005 தமிழ் இலக்கியத்தில் இசை - அரிமளம் சு. பத்மநாபன்
04-01-2006 நானும் தமிழும் - அரிமதி தென்னகன்
11-01-2006 இரு கவிஞர்கள் - க. தமிழமல்லன், தமிழியக்கன்
18-01-2006 அல் - மனிதர்கள் - ச. பிலவேந்திரன்

- ப. மருதநாயகம், இயக்குநர்

# பாவரிமா இளஞ்சித்திரன் இயற்கையெய்தினார்

பல்லாண்டுகளாகத் தமிழ்த்தொண்டாற்றி வந்தவரும் சிறந்த பாவலரும். சென்னை, வண்டலூரைச் சேர்ந்தவருமான பாவரிமா இளஞ்சித்திரனார் தி.ஆ.உ0ங.சு நளி ச - ஆம் நாள் (19-11-2005) இயற்கையெய்தினார். அப்பாவரிமாவின் மறைவிற்கு நற்றமிழ் தன் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது - ஆசிரியர்.

www.padippakam.com



# புதுவை அரசின் தமிழ்மாமணி விருது பெற்ற இறைவிழியனார்க்குப் பாராட்டுப்பா

## இறைவிழியார் வாழ்க இனிது!

நற்றமிழ் ஏடுகளின் நாயகனே! செந்தமிழ்
கற்றவர் நெஞ்சுள் கமழ்பவனே! – முற்றும்
நிறைகுட மாகவே நிற்கும் புலவ!
இறைவிழிய! வாழ்க இனிது.

**- கவிஞர் தே. சனார்த்தனன்,**
**தலைவர், தமிழ் ஆய்வுக் கழகம், புதுவை.**

---

## பாராட்டுப் பா

இறைவிழி யன்றமிழ் மாமணியே
இறையன வும்மைய மெனக்கிலையே!
நிறைமனச் செம்மலர் நேர்மையனாக்
குறைவிலாக் கூர்மதிக் கொள்கையனே!

**- புலவர் பெ. சயராமன், கள்ளக்குறிச்சி.**

---

## வாழ்த்துப்பா

நற்றமிழ் நல்லிதழால் நற்றமிழ் தான்வளர்ப்பான்
நற்றிறம் பாராட்டும் நல்விருது – பெற்றுவந்தான்
தாய்த்தமிழ் மாமணி சாந்த விருதுகண்டு
சேய்த்தமிழர் வாழ்த்துவோம் சேர்ந்து.

**- மணிமொழியார், பொள்ளாச்சி.**

---

வான்கவிதைப் பாவலர்தம் பாக்க ளோடு
வளர்கவிஞர் பாக்களையும் மகிழ்ச்சி யோடு
தேன்பொழியும் மலர்களென வெளியிட் டின்பச்
செறிவார்ந்த தமிழ் நிகழ்வு, வினாவி டைகள்
பான்மொழியாய்க் கட்டுரைகள், கருத்தரங்கம்
பாங்குபெற நற்றமிழில் பதிப்பித் தோங்கும்
மேன்மைசெறி இறைவிழிய னார்க்கு வாய்த்து
மேவுதமிழ் மாமணியாம் விருது வாழ்க!

**- பேர. கி. சிவகுமார், விருத்தாசலம்.**

www.padippakam.com



# இறைவிழியனார்க்கு இனிய வாழ்த்து

தமிழ்மா மணியெனும் தக்க விருதை
அமிழ்தாகப் பெற்ற அருமைத் - தமிழறிஞர்
நன்றேசெய் நல்லார் இறைவிழியார் என்றுமே
இன்பமாய் வாழ்க இனிது.

- புதுவை, நா. பொன்னுசாமி

# அமிழ்தர் இறைவிழியர்!

அருமைத் தமிழின் பெருமை அறிந்தே
உரிமை முரசினை ஓங்கி - அறைவார்;
தமிழர் நலன்களே தம்நலம் என்பார்;
அமிழ்தர் இறைவிழிய னார்.

- பாவலர் வே. முத்தையன்,
துணைத் தலைவர், தமிழ் ஆய்வுக் கழகம், புதுவை.

# வாழ்க தழைத்து!

வெல்லும் இறைவிழி யன்தமிழ் மாமணி
நல்விரு தேந்திடு சொல்வலர் - ஒல்லும்
வகையால் உழைத்திடும் நற்றமிழ்க் காசான்
தகவுற வாழ்க! தழைத்து!

- புலவர் ந. ஞானசேகரன், திருலோக்கி.

# தமிழ்போல் வாழ்க!

கற்றவர் போற்றும் கனித்தமிழ் செழிக்க
'நற்றமிழ்' என்னும் நல்லிதழ் மூலம்
அயரா துழைக்கும் அரும்பெரும் சான்றீர்!
புதுவை யரசின் பெருமை சான்ற
'தமிழ்மாமணி'யெனும் விருது பெற்றீர்!
அமிழ்தத் தமிழின் அருமை யெல்லாம்
இமிழ்கட லுலகில் இணையற் றிலங்க
உடல்நலம் பேணி உயர்பணி யாற்றி
வாழ்க தமிழ்போல் வாழ்க நன்றே!

- ஆ.வே. இராமசாமி, வைரிசெட்டிப்பாளையம்.

www.padippakam.com



# இறைவிழியனார் பல்லாண்டு வாழ்க!

குணச்சுவை என்றென்றும் கொண்டு வாழ்ந்து,
குன்றாத மனிதநேயம் சிறக்கப் பெற்றும்,
இனச்சுவை உணர்வினில் முதன்மை கொண்டும்,
இன்தமிழே மூச்சாக ஆக்கி நின்று
தினந்தினம் ஊக்கமது கண்ட வர்க்குத்
தேடிவந்த விருதுதான் உண்மையாக
மனமகிழ வாழ்த்துகிறேன் வணங்கி நின்று
மென்மேலும் தமிழ்ப்பணி செய்ய வேண்டி!

**- புலவர் ப. தேவகுரு, தேவதானப்பட்டி.**

---

# இறைவிழி வாழ்த்து!

இறைவிழியார் தந்த இலக்கணப் பாடம்
முறையெனக் கண்டு முடிவில் - நிறைவாய்த்
'தமிழ்மா மணி' விருதைத் தாமே முதல்வர்
அமிழ்தாய் அளித்தார் அறிந்து! **- சூலூர்க் கலைப்பித்தன்.**

---

தமிழ்மா மணியெனும் தகைசால் விருதிங்[கு]
உமைவந் தடைந்த[து] உவந்தேன் - கமழும்
முறையிலே 'நற்றமிழ்' மொய்ம்புறக் காக்கும்
இறைவிழிய! வாழ்க! இனிது.

**- புலவர் சி. பெருந்தேவன், தவளக்குப்பம்.**

---

புதுவை அரசின் தமிழ்மாமணி விருது பெற்ற செய்தியை நற்றமிழ் மூலம் தெரிந்துகொண்டேன்.

புதுவை அரசின் இவ்விருதினைப் பெற்ற தங்களுக்கு ஓர் இதழாளன் என்ற முறையில் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். **- சு. மணி, திருவனந்தபுரம்.**

---

**மணிவிழா கண்ட சு. இலக்குமணசுவாமி அவர்களை நற்றமிழ் வாழ்த்துகிறது**

சிறந்த எழுத்தாளரும் கவிஞரும் நற்றமிழன்பரும் ஓய்வு பெற்ற ஆசிரியரும் மதுரை அன்பருமான திரு சு. இலக்குமண சுவாமி அவர்கள் 21-11-2005 இல் தம் மணிவிழாவை நிறைவு செய்கிறார். நற்றமிழ் அன்னார் பல்லாண்டுகள் நலமுடன் வாழ நற்றமிழ் வாழ்த்துகிறது.

- ஆசிரியர்

www.padippakam.com



# இறைவிழியனார்க்குப் பாராட்டு

தங்கள் நலமும் குடும்பத்தினரின் நலமும் அறிய நாட்டம். இம்மாதம் நற்றமிழ் ஏட்டின் நளி மாத இதழ் இன்று வந்தது; அதில் கண்ட தகுதி வாய்ந்த தங்களைப் புதுவை அரசு 'தமிழ்மாமணி' என்னும் உயர் விருதினையளித்துச் சிறப்பித்ததன் மூலம் அது தன் பெருமையைக் காட்டி நின்றது. முதற்கண் தங்களுக்கு இக்கடைசியனின் நெஞ்சங் கனிந்த பாராட்டு; வாழ்த்து. தரம் அறிந்து தானே முடிவு செய்து ஓர் அரசின் நடுவுநிலைத் தன்மையை எண்பித்துக் காட்டிய புதுவை மாநில முதல்வர் மாண்புமிகு ந. அரங்கசாமி அவர்கள் போற்றுதலுக்குரிய வராவர். இப்போதெல்லாம் இது போன்றவற்றில் உண்மை, நடுவுநிலை, தகுதி முதலியவை அறவே போற்றப்படுவதில்லை. கயமைத்தனமும் கையூட்டும் பரிந்துரையும் குறியெதிர்ப்பையுமாய்ப் பின்புலங்கள் மண்டிவிட்டன. எம் போன்றோர்க்கு வருத்தந்தான். உலகளாவிய போக்காகவும் ஆக்கிவிட்டனர். கொடிய சூழ்நிலையிலும் இன்னும் அறம் உண்டு என்பதை மெய்பித்துள்ளது. இவ்விருப்பு தங்களின் தூய மொழித் தொண்டினையும் உயர்ந்த செயற்பணியினையும் தங்கள் நற்றமிழ் ஏட்டின் மூலம் தொலைவிலிருந்தே பார்த்து நெகிழ்ந்து வருகின்றேன். தங்களுக்கு அவ்வப்போது மடலெழுதத்தான் பொழுது அமையவில்லை. தங்களின் உண்மைத் தொண்டிற்கும், நடுவுநிலைப் பண்பிற்கும் அண்மையில் நடந்த தங்கள் ஏட்டின் சிலம்புச் செல்வர் பற்றிய தங்கள் திருத்திய கருத்து எடுத்துக்காட்டாக இருந்ததைக் கண்டேன். அது தான் உண்மை; எதையும் காலம் மெய்ப்பித்துவிடும். அவ்வளவு ஏன்? தங்களின் அப்பழுக்கற்ற தொண்டிற்கு இப்போது அரசு தலைவணங்கிச் சிறப்புச் செய்துள்ளதே. என் நெஞ்சு சொல்லொணா நிறைவு பெற்றுள்ளது. பன்மொழிப் புலவருக்குச் சென்னைப் பல்கலைக் கழகம் சிறப்பு முனைவர் விருதளித்தஞான்று எளியேனுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கும் நிறைவுக்கும் பின், இப்போது தான் தங்களுக்கு அளிக்கப்பட்ட விருது கண்டு மிகமிக நிறைவும் பெருமையும் மகிழ்ச்சியும் ஏற்பட்டன.

தங்களின் 'நற்றமிழ்' ஏட்டின் தரம் மிகச் சிறந்ததாகவுள்ளது. 'கொடுத்தபடி தொடுத்த பாடல்கள்' பகுதி இதுவரை எந்த ஏடும் எளியேனின் கவிதை ஏடு கூட எட்டாத உச்சி முகடு. ஆய்வுக் கட்டுரைகள் மிக்க பயனுள்ளவையாகவே உள்ளன. இலக்கிய இலக்கணத்திற்கு எடுத்துக்காட்டான ஏடு 'நற்றமிழ்'. தங்கள் உழைப்பின் அறுவடை தமிழ் தங்களால் வளர்ந்து வருகிறது. பாராட்டி மகிழ்கிறேன்.

**- தெசிணி, சென்னை.**

---

ஆசிரியர் ஐயா, மு. இறைவிழியன் அவர்களுக்குப் புதுவை அரசின் உயர் விருதான "தமிழ்மாமணி" விருதைப் புதுவை மாநில முதல்வர் மாண்புமிகு ந. அரங்கசாமி அவர்கள் வழங்கியதைப் படம் பிடித்து நற்றமிழின் அட்டையை அழகு செய்திருந்தார்கள். தங்களுக்கு எங்களின் பாராட்டுக்களும், வாழ்த்துக்களும் உரித்தாகும். ஐயா,

www.padippakam.com



இறைவிழியன் அவர்களே தங்களின் தமிழிய மீட்புப் பணி மேலும் தொடர எமது வாழ்த்துக்கள். தமிழ்மாமணி விருது சரியான மாந்தரைச் சென்றடைந் துள்ளது. இறைவிழியனாரால் விருதுக்கும், புதுவைக்கும் பெருமை. - அருவை தமிழன்பன், அருப்புக்கோட்டை.

ஆழ்ந்த புலமையாலும்
அறிவார்ந்த செயலாலும்
அருந்தமிழுக்குத்
தொண்டு செய்யும் சான்றோரே!
நற்றமிழ்ப் பணியால்
நாளும் தமிழ்வளர்க்கும்
வற்றாத தமிழருவியே!
தமிழ்மாமணி விருது பெற்ற
தலைசிறந்த பாவலரே!
என்றும் நும்பணி
நின்று விளங்கிட
வணங்குகிறேன்
வாழிய நலனே. - அ.க. கயல்இனியன், ஈரோடு.

இன்றைய நாளில், தமிழ்த்தாய்க்கு விழியாகவும், ஒளியாகவும், தங்கள் இலக்கணப் புலமையையும், 'நற்றமிழ்' இதழ் மூலம் வெளிப்படுத்திக் கொண்டுள்ளீர்கள்!

தமிழை விற்று வயிறு வளர்க்கும் இன்றைய நாளில், தங்களை விற்று தமிழை வளர்க்கும் தங்களுக்குத் 'தமிழ்மாமணி' விருது வந்து சேர்ந்தது அறிந்து அகமகிழ்ந்தேன்.

தங்கட்கு இவ்விருது வழங்கியதன் மூலம் புதுவை அரசு தனக்குப் புகழ்தேடிக் கொண்டது என்பதுதான் உண்மை. முதல்வர் உண்மையிலேயே நேர்மையானவர் என்பதும் தெளிவாகிறது. இதுபோன்ற விருதுகள் மேலும் மேலும் தங்களைத் தேடி வர விரும்புகின்றேன். வாழ்க தாங்கள் பல்லாண்டு! வளர்க தங்களின் தமிழ்த் தொண்டு. - மு. பாரி, காரைக்குடி.

தங்களுக்குத் "தமிழ்மாமணி" விருது கிடைத்ததை எண்ணி யெண்ணி இன்புற்று மகிழ்கின்றோம்; யானும் என் குடும்ப விளக்கும்.

வாழ்க! தங்களின் தமிழ்த்தொண்டு!

வளர்க! நற்றமிழால் தங்களின் புகழ்!

- து. இராசகோபால், திண்டுக்கல்.

புதுவை அரசின் உயரிய விருதான தமிழ்மாமணி பெற்றமைக்கு என் வாழ்த்துகள்! இவ்விருது மேலும் தங்களை ஊக்குவிக்க! நீடு வாழ்க! - அ. சிவலிங்கம், திருச்சி.

www.padippakam.com



# நற்றமிழுக்கு வந்த நன்மடல்கள்

நற்றமிழைத் தொடர்ந்து அனுப்பி நெஞ்சம் மகிழவைக்கும் தங்களைப் போற்றுகிறேன். நேரில் சந்தித்து அறிமுகம் ஆகவும் விழைகிறேன்.

புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் முனைவர் ப. மருதநாயகம் அவர்களின் கட்டுரை ஓர் அரிய விளக்கத் தைப் பகர்வனவாக அமைந்தது. தமிழ் யாப்பு மரபு வடமொழி மரபினும் எங்ஙனம் சிறந்ததென மேற்கோள் காட்டி விளக்கினார். எங்களுக் கெல்லாம் பாடல் எழுதும் பயிற்சி தரும் தங்களைப் பாராட்டுகிறேன்.

- பெருமாங்குப்பம். சா. சம்பத்து.

புதுவை அரசு தங்களுக்குத் தமிழ்மாமணி விருதளித்துப் பெருமை தேடிக் கொண்ட செய்தியை நற்றமிழ் இதழைப் பெற்ற பின்னரே அறிந்தேன். காலங்கடந்த எனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தன்னலங் கருதாத தங்கள் தமிழ்ப் பணிக்குத் தலைவணங்கு கின்றேன். தங்கள் பணி தொடரட்டும். ஆர்வலர்கள் தங்கள் பக்கமிருப் பார்கள். உங்களுக்கு உறுதுணையாக யானும் என்றுமிருப்பேன்.

- க.பொ. இளம்வழுதி, கடலூர்.

தாங்கள் பெற்ற **தமிழ்மாமணி** விருது தனித்தமிழ்க்கும் சிற்றிதழ்க்கும் மிகவும் பெருமை சேர்க்கக் கூடிய ஒன்றாகும்.

- பாச்சுடர் வளவ. துரையன், கடலூர்.

புதுவை அரசு தங்களின் தமிழ்ப்பணியை ஆய்ந்து தமி ழ்மாமணி விருதினை வழங்கியதற்கு என்னின் வாழ்த்துக்களையும் பாராட்டு தலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

- மு. அந்தாலனார், உலகத்தமிழர் பண்பாட்டியக்கம்.

தாங்கள் புதுவை அரசின் உயர்ந்த விருதான 'தமிழ்மாமணி' விருதினைப் பெற்ற செய்தியறிந்து உளமலியுவகை எய்தினேன். என் நெஞ்சார்ந்த பாராட்டை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

- புலவர் மா.சு. மணி, திருக்கழுக்குன்றம்.

புதுவை அரசின் உயர் விருதான தமிழ்மாமணி விருதினைத் தங்கட்கு அளித்ததன் மூலம் அவ்விருது பெருமை பெறுகிறது. தங்கள் தமிழ்ப்பணி தொடர நல்ல உடல்நலத்தைத் தாங்கள் பெற எந்தை கந்தவேலை இறைஞ்சுகின்றேன்.

- அப்பரடிப்பொடி ச. திருநாவுக்கரசு, முசிரி.

"நற்றமிழைக் கற்றவர் கண்டு களித்திட
நற்றமிழ் என்னும் இதழினைப் - பெற்ற
தமிழர் இறைவிழியர் தக்க விருதாம்
தமிழ்மா மணிபெற்றார் தாம்".

- புலவர் தி. பக்கிரிசாமி, திரு.பட்டினம்.

www.padippakam.com



நற்றமிழ் ஏடொன்று திங்களுக் கொன்றெனக்
கற்றவர் கைகளில் தந்தாய்நீ - உற்ற
தமிழ்மா மணிவிருதைத் தந்தார், தகவாய்!
தமிழ்த்தாய் மகிழ்ந்திடத் தான்.

- க.வி. சனார்த்தனன், காஞ்சிபுரம்.

தங்களுக்கு என்றோ கிடைத்திருக்க வேண்டிய 'தமிழ்மாமணி' விருது இப்பொழுதாவது கிடைத்ததே! மகிழ்ச்சி! தாங்கள் உடல் நலம் உளநலம் பெற்றுப் பல்லாண்டுகள் வாழ வாழ்த்துகிறேன்.

- சு. இலம்போதரன், சென்னை.

புதுவை அரசின் உயர்விருதான 'தமிழ்மாமணி' விருது தங்களுக்குக் கிடைக்கப் பெற்றமை அறிந்து மட்டிலா மகிழ்ச்சி அடைந்தேன். தங்களை வாழ்த்த வயதில்லை. வணங்குகிறேன். தங்களின் தமிழ்த் தொண்டிற்குக் கிடைக்கப் பெற்ற பரிசு இதுவாகும். சென்ற இதழின் முதற் பக்கத்தில் தங்கள் திருவுருவை முதன் முறையாகக் கண்டேன்.

- ச. அருள்நேரு, கடலாடி.

## கலைமாமணி நூற்கடல் தி.வே. கோபாலய்யர் உருவாக்கிய தமிழ் இலக்கணப் பேரகராதி (17 தொகுதிகள்) அறிமுக விழா

தி.ஆ.உ0ங்கசு நளி 20 (05-12-2005) புதுச்சேரி மீட்பரின் அன்னை இல்லத்தில் 'நற்றமிழ்' திங்களிதழ் சென்னைத் தமிழ்மண் பதிப்பகம் ஆகியவற்றின் சார்பில் நூற்கடல் தி.வே. கோபாலய்யர் உருவாக்கிய தமிழ் இலக்கணப் பேரகராதி (17 தொகுதிகள்) அறிமுக விழா முதுபொரும் புலவர் ஆ. சிவலிங்கனார் தலைமையில் நடந்தது. தமிழ் மாமணி புலவர் மு. இறைவிழியன் வரவேற்றார். புதுவை மாநில முதல்வர் மாண்புமிகு ந. அரங்கசாமி அவர்கள் நூல் அறிமுகம் செய்து வாழ்த்துரைத்தனர். தோழர் வே. ஆனைமுத்து அவர்கள் முனைவர். இரா. திருமுருகனார் அவர்கள், புலவர் கி.த.பச்சையப்பனார் அவர்கள் ஓய்வு பெற்ற நடுவர் கோ. ஆதிமூலம் அவர்கள் முனைவர் ஈவா வில்டன் அம்மையார் ஆகியோர் வாழ்த்துரைத்தனர். நூற்கடலார் ஏற்புரை வழங்கினார். தமிழ்மண் பதிப்பக உரிமையார் கோ. இளவழகன் நன்றி நவின்றார்.

### புதுவை முதல்வரின் தந்தையார் நடேசனார் இயற்கையெய்தினார்

7-12-2005 இல் புதுவை திலாசுபேட்டையில் புலவர் ந.ஆதிகேசவன், புதுவை முதல்வர் மாண்புமிகு ந. அரங்கசாமி ஆகியோரின் தந்தை அர. கிருட்டிணசாமி (எ) நடேசனார் இயற்கையெய்தினார். அன்னார் மறைவிற்கு நற்றமிழ் தன் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

- ஆசிரியர்

படிப்பகம்

www.padippakam.com



# மண்ணுலக வாழ்வு : வள்ளுவரும் பிளேட்டோவும்

முனைவர் ப. மருதநாயகம், இயக்குநர்,
புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்

வள்ளுவர் பத்துக் குறள்களில் கேள்வியறிவின் இன்றியமை யாமையை விளக்குகிறார்.

செவிக்குணவில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும். (412)

பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லார் இழைத்துணர்ந்து
ஈண்டிய கேள்வி யவர். (417)

கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால்
தோட்கப் படாத செவி. (418)

நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய
வாயினர் ஆதல் அரிது. (419)

செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என். (420)

பிளேட்டோ எழுதியுள்ள ஒவ்வொரு உரையாடலிலுமே அவரது ஆசிரியராகிய சோக்ரதர் ஒவ்வொரு நுட்பமான கருத்தை விளக்குதற்கும் பிறரிடமிருந்து வரும் சொற்களின் நுட்பங்களை ஆராய்தற்கும் மேற்கொள்ளும் முயற்சி பெரிது. இஃதே அறிவுடையவனின் செயற்பாடு என்பார் வள்ளுவர்.

என் பொருளவாகச் செலச் சொல்லித் தான் பிறர்வாய்
நுண் பொருள் காண்பது அறிவு. (424)

ஒரு கருத்தைக் கூறுவோர் யாராக இருந்தாலும் அவரைப் பற்றிக் கவலைப்படாது, அக்கருத்தை ஆராய்ந்து ஏற்றுக் கொள்ளத்தக்கதா, புறக்கணிக்கப்பட வேண்டியதா என்பதை முடிவு செய்ய வேண்டு மென்றும் சோக்ரதர் இளையரையும் முதியோரையும் கேட்டுக் கொள்வார்.

"இதை நான் யார் கூறக் கேட்டிருந்தாலென்ன?" என்றார் சார்மிடிசு.

அதற்கு நான், "அதைப் பற்றி நமக்கு அக்கறையில்லை. யாரால் சொல்லப்பட்டவை என்பதைவிட அவை உண்மையானவையா, தவறானவையா என்பதே நாம் அறிய வேண்டியதாகும்" என்று விடையளித்தேன் (பிளேட்டோ 5)

பீட்ரசு என்பாரைச் சோக்ரதர் யார் எதைச் சொன்னாலும் அக்கூற்றிற்கு உரியார் யார் என்று அறிய முனைவதற்காகக் கண்டிப்பார்.

www.padippakam.com



டோடனாவின் கோயிலில் ஓக்மரங்கள் வருவதுரைக்கும் மரபொன்று இருந்தது. அக்காலத்து மாந்தர்கள் தங்களது எளிய பண்பு காரணமாக, உண்மையைச் சொல்லியது ஓக்மரமானாலும் மலையானாலும் அதனை ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் நீயோ ஒரு கருத்து சரியானதா, தவறானதா என்று அறிய முயலாமல் அதைச் சொன்னவர் யார், அது எந்நாட்டிலிருந்து வந்தது என்றெல்லாம் கேட்கிறாய். (பிளேடோ 139)

மரண தரண்டனை விதிக்கப் பெற்றுச் சிறையில் அடைபட்டிருந்த போதும் சோக்ரதர் தமது நண்பர்களிடம் தாம் கூறுவனவற்றைக் கூட நம்பவேண்டாமென்றும் அவற்றின் மதிப்பைக் காய்தல் உவத்தல் அகற்றி ஆராய்தல் வேண்டுமென்றும் கூறுவார்.

நான் சொல்லும் உண்மையைப் பற்றி அல்லாமல் சோக்ரதரைப்பற்றி எண்ணிப்பார்க்க வேண்டாமென்று உங்களைக் கேட்டுக்கொள்வேன். நான் உண்மை பேசுவதாகத் தோன்றினால் என் கருத்தை ஏற்றுக் கொள்ளுங்கள்; இல்லையானால், என்னை முழு ஆற்றலோடு எதிர்த்துப் போரிடுங்கள். ஏனெனில் நான் என்னுடைய உற்சாகவுணர்வு காரணமாக உங்களை ஏமாற்றுவதோடு என்னையும் ஏமாற்றிக் கொள்ளக் கூடாது, தேனீயைப்போல், இறப்பதற்குமுன் என்னுடைய கொடுக்கை உங்கள் உடலில் விட்டுச் செல்லக் கூடாது. (பிளேடோ 238)

அறிவுள்ள ஒவ்வொரு மனிதனும் யாரையும் எல்லாமறிந்தவராகக் கருதி அவரது அடிமையாகாமல் அவர் கூறும் ஒவ்வொரு கருத்தையும் சீர்தூக்கிப்பார்த்து முடிவு செய்ய வேண்டும் என்பதை வள்ளுவர் இரண்டு மூன்று இடங்களில் தெளிவாக்குவார்.

எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. (423)

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. (355)

- (தொடரும்)

## சங்கமித்திரா வாழ்த்துகிறார்

27-10-2005 நிகழ்வில் தமிழ்மாமணி விருது உங்களுக்கு வழங்கப்பட்டது அறிந்தேன். வாழ்த்துக்கள். பாராட்டுக்கள். ஏதாவது பணம் இருக்குமா - இல்லை, மரக்கட்டையா, அரசு - விருதுடன் ஓய்வூதியம் போல ஒரு தொகை (மாதம் ரூ. 1000 கூட) இதழ்ப் பணிக்கு உதவியாக இருக்கும். சில எழுத்தாளர்களுக்கு வீட்டு வாடகை உதவி - ஓய்வூதியம் என்றெல்லாம் - மாநில அரசும் மைய அரசும் தனித் தனியாக வழங்குவதாக அறிகிறேன். கலை பண்பாட்டுத் துறையினர் நற்றமிழ்த் தொண்டர்களைக் கண்டறிந்து வலிய வழங்கி கவுரவிக்க வேண்டும்.

www.padippakam.com



# கொடுத்தபடி தொடுத்த பாடல்கள்

## வஞ்சி விருத்தம்-9 — கருவிளம்+கூவிளம்+ காய்

இலங்கையின் தேர்தலில் வெற்றியினை
நலமுறக் கண்டனர் இராசபச்சே
விலையிலா நல்லமை தியைநாட்டில்
நிலைகொளச் செய்திட வேண்டுமின்னே!
1. - புலவர் அரங்க பணிக்குன்றன், புதுவை.

அழகனை கந்தனை அறுமுகனைப்
பழகிடும் பைந்தமிழ் தனில் பரவப்
பழவினை தீர்ந்துமே பயன்பலவாய்
முழுவதிர் வாழ்வது முனைவிடுமே!
2. - செஞ்சடையான், திருக்கழுக்குன்றம்.

நடிப்பவர் தாமெனில் நடித்திடுக!
தடித்தன மாகவே தருங்கருத்தேன்?
படிப்பினைத் தாம்பெறப் பயிற்றிடுவோம்;
இடித்துரை கூறியே திருத்திடுவோம்!
3. - வ. சிவசங்கரன், திருக்கழுக்குன்றம்.

தமிழ்மகள் கற்பினில் தாழ்ந்தவளாம்
தமிழினம் கொம்பெதும் கொடண்டிலதாம்
இழிகுணப் பெண்மணி ஏளனமாய்
மொழிகிற ஏச்சினுக் கார்த்தெழுவோம்!
4.- வெ. பரமசிவபாண்டியன், சின்னாளப்பட்டி.

இனியதாம் செந்தமிழ் என்றுணர்ந்து
கனிவுடன் தாய்மொழி கற்பீரே!
கனியதாம் மாண்பென நன்கறிந்து
பணிவுடன் பண்பினை ஏற்பீரே!
5. - கவிஞர் கி. பாரதிதாசன், பிரான்சு.

கடலலை என்றுமே ஓய்வதில்லை
திடமுடை மெய்யினில் நோயுமில்லை
கடனுற வாழ்பவர் உயர்வதில்லை
கடமையில் நிற்பவர் தாழ்வதில்லை!
6.- கவிஞர் தே. சனார்த்தனன், முதலியார்பேட்டை.

பொருளினைச் சேர்த்திடத் துணிவோரே
அருளினைச் சேர்த்திடத் துணிவீரே!
இருளினில் வாழ்ந்திடும் எளியோரே
தெருளினைப் பெற்றுமே தெளிவீரே!
7.- பாவலர் வே. முத்தையன், முத்தியால்பேட்டை.

அறஞ்செய எண்ணிடல் வேண்டுமடா
புறஞ்சொல அஞ்சிடல் வேண்டுமடா
மறஞ்சிறந் தோங்கிடல் வேண்டுமடா
நறுந்தமிழ் கற்றிடல் வேண்டுமடா!
8.- கவிஞர் வே. பூங்குழலி பெருமாள், திரு.வி.க. நகர்.

மனத்தினில் நல்லவை ஏற்றிடுவாய்
சினத்தினை என்றுமே அகற்றிடுவாய்
இனிமையைப் பேச்சினில் கலந்திடுவாய்
வினைகளில் தூய்மையைக் கடைப்பிடிப்பாய்.
9. - பாச்சுடர் வளவ. துரையன், கடலூர்.

சொடுக்கினால் மின்னொளி பாய்வதுபோல்
துடுக்கினால் சொற்களைத் தூவிவிட்டார்
உடுப்பிலும் தம்மினம் காட்டிடுவார்
அடுக்குமோகுட்புவின் ஆணவமே.
10. - பாவலர் தேவமைந்தன், புதுவை.

சாடுகிறார் மக்களைத் துமுக்கியினால்
மடிகிறார் பற்பலர் மதவெறியால்
கடிகிறார் நல்லவர் கனிவுடனே
படுகிறார் இன்னலே பலரிவணே.
11.- வில்லவன். ப. முத்தமிழ்வாணன், புதுவை.

கணபதி செந்திலோன் கருதிடிலே
முனமுளன் செந்திலோன் பினர்நுழைந்த
கணபதி எப்படித் தலைவனானான்
இனமுறை தப்படி எதிர்மறையா?
12. - மணிமொழியார், பொள்ளாச்சி.

பயின்றினை இன்றமிழ் பழுதறவே
இயற்றுபல் பாவென எனைப்பணித்த
நம்மொழி அம்மையை நாளிழந்த
துயர்ப்பெருங் காதையார்க் கோதிடுவேன்.
13. - சீ.பெ. முத்துக்குமரன், கோவை.

பணிவுடன் நன்மொழி பாங்காக
அணியெனச் செப்புதல் ஆக்கமதே,
பிணியது நந்தமை யணுகாமல்
துணிவுடன் காத்திடில் துன்பிலதே.
14.- புலவர். த. தட்சணாமூர்த்தி, திரு.பட்டினம்.

தமிழினம் நந்தமிழ் அறிந்திடவும்
தமிழுளம் நற்றமிழ் ஏற்றிடவும்
தமிழ்மொழி காத்திடத் தொண்டாற்றும்
தமிழ்மணி மாமணி இறைவிழியார்.
15. - மு. தமிழ்நிலவன், ஐயன்குடிப்பாளையம்.

படித்திட நெஞ்சினில் உறுதிவேண்டும்
நடித்திட மெய்யினில் வலிமை வேண்டும்
கொடுத்திட உண்மையில் அருள்வேண்டும்
தொடுத்திடச் சொற்களஞ் சியம்வேண்டும்.
16. - புதுவை. ப. அங்கயற்கண்ணி.

www.padippakam.com



மொழியினைப் போற்றிடும் முனைப்பறியான்
விழியுளான் என்னினும் குருடன்தான்!
மொழிஇரு கண்ணெனக் கொண்டவனே
மொழியுள மட்டுமண் நிலையாவான்!
17. - படைக்களப் பாவலர், ஆர்க்காடு.

கனமழை நாட்டிலே பெய்ததாலே
மனமது கெட்டுமே வாழ்வோர்க்குக்
கணமதும் தாமதம் செய்திடாமல்
இனமது வாழவே உணவளிப்பீர்!
18. - புலவர். அ. பக்கிரிசாமி, திருநள்ளாறு.

நலந்தரும் யாவையும் நாம்செய்வோம்
பலர்புகழ் செய்கையால் பயன்கொள்வோம்
உலவிடும் காற்றென உலகாள்வோம்
மலர்மணம் போலவே மண்மகிழ்வோம்.
19. - தேன்மொழி, ஆர்க்காடு.

விழியிலா மானிடர் காணுதற்கு
வழிவகை செய்வது நலனன்றோ!
பழியிலாப் பேரினைப் பெற்றிடவே
விழிதனை யீந்திடு, வாழ்ந்திருப்பாய்!
20. - ஆ. அறிவரசன், புதுவை.

தமிழினம் என்றுநாம் சேர்ந்திடுவோம்
தமிழினி யென்றுமே பேசிடுவோம்
தமிழ்தனைக் கண்ணெனக் காத்திடுவோம்
அமிழ்தென நம்மொழி வாழ்ந்திடுமே!
21. - சோ. இளஞ்செழியன், புதுவை.

அறத்தினை வாழ்வினி லளித்தேநம்
பிறப்பினைச் சீர்பெறச் செய்திடுவோம்!
சிறப்பினை என்றுமே வழங்கிடுநற்
குறளினைக் கண்ணென ஏற்போமே!
22. - சோ. கனிமொழி, புதுவை.

சினமதைக் கொன்றிடல் அலைபாயும்
மனமதை வென்றிடல் அல்லலுறும்
இனமதைக் காத்திடல் இலக்கெனவே
தினமிதைப் போற்றிடல் உயர்வழியாம்!
23. - சோ. அருமை சுந்தரி, புதுவை.

பிழைத்திடல் குற்றமே! பெருவிருப்போ(டு)
அழைத்திடும் சுற்றமோ டணியணியாய்
உழைத்திடு! வெற்றிமிக் குயர்வுவரும்!
தழைத்திடும் பொற்புறத் தமிழினமே!
24. - கருவை. மு. குழந்தை.

நினைவினில் கொள்ளுநம் மொழிப்பகைவர்;
முனைந்துநில் தீமகார் பொய்யொடுக்க;
புனைவினில் வல்லுநர் பின்னாக்கர்
எனைவினை யாவினும் வராதொழிப்பீர்!
25. - வில்லியன், புதுவை.

இலவயம் பெற்றிடல் என்பதில்தான்
கலவரம் வந்திடல் கண்கூடாம்
பலவுயிர் வாங்கினை பாரப்பணமே
உலகினில் அல்லலும் ஓய்ந்திடுமோ!
26. - மணிமேகலை குப்புசாமி, புதுவை.

திரௌபதி யென்பவள் அறுவரிலே
உரைந்தனன் ஐவரை என்றாலும்
ஒருவனை நெஞ்சிலே நினைந்தாளாம்!
இருவராய் வந்துளாள்! அறிந்திலீரோ?
27. - புலவர். பெ. சயராமன், கள்ளக்குறிச்சி.

சுகாசினி யென்றொரு திரைக்கூத்தி
பகாக்குண மாகிய தமிழ்க்கற்பை
விகாரமா யேசின ளெனக்கேட்டே
தகாச்சில சொற்களும் வந்தனவே!
28. - சிலம்பூர்க் கிழான், கல்லை.

இறைவிழி பெற்றநல் விருததுவான்
மறைமுதல் வள்ளுவர்க் கிணையதாகும்
நிறைவுடன் வாழ்த்துவன் கரம்கூப்பா
துறைபல நற்றமிழ் வளர்வதாக.
29. - கு. கோவிந்தன், செங்கம்.

அழிந்திடு தீமத நோயைநீ
செழித்திடா வாறுபார்! தடைசெய்யும்
வழிதனைப் பார்த்திடு மறந்திடாதே!
விழிகளில் தூக்கமேன் உறங்கிடாதே!
30. - கவிஞர். சசி, தோக்கவாடி.

துடிக்கிறாய்; தீவழிப் பொருளீட்ட
வெடிக்கிறாய்; சாதியின் பெயராலே
முடிக்கிறாய்; தீச்செயல் முனைந்திங்கே
படித்ததால் பெற்றதென்? பகர்வீரே!
31. - அதலை இராமன், மதுரை.

பனிமலை உச்சியில் பெருங்குளிரால்
தனிமையில் சேர்ந்திடும் மனிதகுலம்
இனிவரும் நாட்களில் இயைபுடைய
இனிப்புடை நல்வினை மேற்கொளுமா?
32. - த. முத்தமிழ், தருமபுரம்.

அறிதுயில் கொள்பவர் மடியுடையோர்;
வெறியதில் மூண்டிடில் விளைவினிதோ?
பொறியென நற்பெயர் பறந்திடுங்கால்,
அறிகுவர் ஆள்வினைச் சிறப்பினையே!
33. - நா. தண்டபாணி, அம்பல்.

தமிழருக் கென்றொரு நாடிருப்பின்
தமிழ்மொழி யேமுதற் றெனவருமே
தமிழ்தமிழ் எங்கணுந் தமிழ்பரவும்
தமிழரவ் வாய்ப்பினைப் பெறுவதெந்நாள்?
34. - மருதநாடன், திருச்சி.

www.padippakam.com



ஆவியுல கில்நில வாய்த் தோன்றி
புவிதனில் பொங்கிடும் பெருநிலவாய்,
செவியினில் தேங்கிடும் தேனமுதாய்,
நவிலவோர் பாவலன் பாவேந்தன்.
35. - கவிஞர். பாலசந்திரன் சேகபு, வேலூர்.

படிக்கிறார் கல்வியில் பண்புகளை!
உடுக்கிறார் மேனியும் வெளிக்கொணர்ந்தே!
மடிக்கிறார் இன்றமிழ் மரபெல்லாம்
துடிக்குதே நெஞ்சமும் இழிதமிழா!
36. - கவிஞர் பெ. அறிவழகன், சின்னசேலம்.

வருந்திய வாழ்வினில் துயர்நீக்கும்
மருந்தென வாய்த்தது வள்ளுவமே!
பொருந்திய நோக்குடன் பயில்கின்றேன்
அருந்தமிழ் மாண்பினை உணர்கின்றேன்.
37. - புலவர் ம.சு. மணி, திருக்கழுக்குன்றம்.

தமிழ்மொழி நம்மொழி யென்றென்றே
தமிழ்தனை நாடொறும் பயின்றிடுவீர்!
அமிழ்தென நற்றமிழ் பருகிடுவீர்!
தமிழ்நெறி நின்றிட முயன்றிடுவீர்!
38. - அப்பரப்பொடி. ச. திருநாவுக்கரசு, முசிறி.

அறிவினால் நற்செயல் புரிகின்றாய்;
அறவழி நிற்பதால் நிலைக்கின்றாய்;
முறையொடு வாழ்வதால் சிறக்கின்றாய்
நெறிவழி மாறினால் என்னாவாய்?
39.- கவிஞர். மருத்துவர். இராகவனார், அதலை.

உளமெலாம் நல்லதே நிறைந்திருந்தால்
நலமெலாம் நண்ணிடும் அதைவிடுத்தே
அலவெலாம் செய்திட முந்துவதால்
குலங்கெடும் உன்நலம் ஒழிந்திடுமே!
40. - க. துரையரசன், வேலாயுதம்பாளையம்.

மறைவினில் வன்செயற் பண்பிற்கும்
முறையிலா வாழ்வினால் நோயிற்கும்
மறைவழி ஏற்றிடாச் செயலுக்கும்
குறைவின் மாள்வரே மாக்களவர்.
41. - கவிஞர். பெ. போத்தி, மதுரை.

உயர்வினைப் பெற்றிட உழைப்பீரே!
வயலினை வாழ்வினில் உயர்த்திடுவீர்
இயலிசை நாடகம் வளர்த்திடுவீர்
அயலவர் அன்பினைப் பெற்றிடுவீர்!
42. - இரா.கு. அரங்கசாமி, தங்கவயல்.

பயன்மிகு காந்திய சிந்தனையை
நயம்பட நாளுமே கடைப்பிடித்துப்
பயமிலாப் பாரதம் படைத்திடும்நற்
செயலினை யாவரும் தேர்ந்திதெடுப்போம்.
43. - இரா. அருணாசலம், ஆனந்தா நகர்.

படிக்கிறார் நூல்பல நுனியளவில்
நடிக்கிறார் நுண்ணறி வுடையவர்போல்
பிடிக்கிறார் ஆள்பலர் புகழ்ந்திடவே
அடிக்கிறார் கொள்ளையே! அவலமிதே!
44. - வே.இரா. சிவஞானவள்ளல், வேலூர்.

கனிதமிழ்க் கன்னலர் கனிமொழியர்
ஒளிதமிழ் ஊற்றினர் உயர்தமிழர்
வளிதமிழ் வாழ்வினர் வளத்தமிழர்
விளிதமிழ் வேந்தராய் விளங்குவரே.
45. - து. ஆதிநாராயணமூர்த்தி, பரதராமி.

விதியிது தானென வெம்பாதே
மதியினால் தொல்லையைத் தூளாக்கு!
எதிலுமே தன்முனைப்(பு) உனக்கென்றால்
அதில்விளை வெற்றியோ அளவில்லை!
46. - திருமதி. கற்பகம், பரதராமி.

துயர்எனில் தோய்பவர் துணிவடையார்
அயர்ந்தவர் வாழ்வினில் மகிழ்வடையார்!
உயர்வழி செல்பவர் உயர்வடைவார்
பெயல்மழை யாகவே பேறடைவார்!
47. - ஆர்க்காடு. அமுதோன்.

படிப்புடன் பண்பினைக் கற்றிடுவோம்
படிப்பினைக் கண்ணெனப் போற்றிடுவோம்
படிப்பது தந்திடும் பல்லின்பம்
படிப்பினால் வாழ்ந்திடும் உன்குடும்பம்.
48. - மு. அருணகிரி, பாதூர்.

கனிப்புடன் காத்திரு கற்பினையே
அணிகலன் சூடிய பெண்ணழகே
பணிவுடன் வாழ்ந்தது போதுமடி
துணிவுடன் வாழ்ந்திடப் பழகிடுநீ!
49. - மு. சண்முகம், பாதூர்.

விலங்குடன் விண்ணளக் கும்பறவை
துலங்கிட நாமணி துணிமணிகள்
விலக்கியே வாழினும் அழகுண்டு
புலைமன மாந்தனுக் கழகுண்டோ!
50. - இரா. பிரியா, வைப்பூர்.

எனதுயிர்த் தாய்மொழி தமிழினையே
மனத்திலே என்றுமே நிறுத்திடுவேன்!
தினமுமே கற்றிடக் குறளினையே
மனத்தினை வைத்திடும் செழுமையுடன்!
51. - சே. இராசன், வைப்பூர்.

செருக்குடன் யாவரும் இல்லாமல்
விரும்பியே நல்லதைச் செய்திட்டால்
விரைவினில் இந்தியா வளர்ந்துவிடும்
பெருமையில் யாவரும் திளைத்திடலாம்!
52. - கு. பாலவர், ஏப்பாக்கம்.

www.padippakam.com



இறைவனை நெஞ்சினில் சுமந்திட்டால்
இறைவனின் ஆசியைப் பெற்றிடலாம்!
நிறைமழை நாட்டினில் பொழிந்திட்டால்
குறைவிலா வாழ்வினைப் பெற்றிடலாம்!
53.- கு. முதற்பாவலர், சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

கலைபல கண்டதும் என்முறைக்கோ?
கொலைவெறி வன்முறை கூத்திடுதே!
நிலையுயர் வாழ்முறை நூறிருந்தும்
அலைமன வஞ்சரால் குலைவுறுதே!
54. - கொட்டப்பட்டு, ப. சக்திவேலன்.

நடிப்பவர் நாடகம் நாடறியும்
படிப்பவர் அப்படி நடக்கலாமா?
படிக்கிற பாடமாய் நடந்தாலே
படிக்கிற வாழ்வினைப் பெறலாமே!
55. - தி. பக்கிரிசாமி, திரு.பட்டினம்.

அறிவியல் ஆய்வுகள் ஆயிரமும்
நெறியியல் தாழ்வுறின் வீழ்வுறுமே!
பொறியியல் நுண்துறைப் புகழெல்லாம்!
பொறிவழிச் செல்லுழிப் புதைந்தழியும்!
56. - அகரமுதல்வி, பொன்மலை, திருச்சி.

அடுத்தவன் வீழ்ந்திடும் எண்ணத்தில்
கடுகினைப் போன்றிடும் உள்ளத்தில்
தொடுத்திடும் அம்பினைப் போலாகிக்
கெடுத்திடும் மானிடன் கெடுவதென்றோ?
57. - எழிலன், சென்னை.

தமிழகம் எங்குமே தற்குறிகள்
தமிழரின் மேன்மையைக் குலைப்பதனால்
தமிழினைக் காத்திட எந்நாளும்
தமிழரே ஆவன செயவேண்டும்.
58. - புதுவை, நா. பொன்னுசாமி.

தடித்ததாம் சொல்லது தப்பென்று
தடுப்பதில் கண்ணியம் பார்க்காமல்
துடப்பமும் காலணி யுமேபதிலாய்
நடப்பது செந்தமிழ்ப் பண்பாமோ?
59. - சூலூர் கலைப்பித்தன்.

வறுமையும் நோயுடன் வாட்டியதில்
நிறையுள வாழ்விழி மாந்தர்க்குக்
குறையறச் சேவையை ஈந்திட்ட
இறைநிகர் மங்கையைப் போற்றிடுவோம்.
60. - சா. இராசலிங்கம்.

இறைவிழி யர்தமைப் பாராட்டி
நிறைவுடன் தந்தனர் விருதொன்று;
கறையிலா நெஞ்சுடன் உழைத்ததனால்
இறைமொழி யாலுமை வாழ்த்துகின்றேன்!
61. - கே.வி. சனார்த்தனன், காஞ்சிபுரம்.

துடிக்கிறார் ஏழைகள் சோறின்றி
அடிக்கிறார் காவலர் உதவிகேட்டால்
முடிக்கிறார் வாழ்வினை மோதவிட்டே
நடிக்கிறார் ஆள்பவர் திட்டமிட்டே!
62.- கவிஞர். அரச. ஈகவரி இளங்கோ, புதுவை.

அருந்திய வள்ளுவன் அருங்குறளைக்
கருத்துடன் மாணவர் கற்பதனால்
விருத்தியும் ஆண்மையும் வீரமுடன்
திருத்திய செந்நெறி பெறலாமே!
63. - காரை. இளங்கம்பன், புதுச்சேரி.

தவலரும் தொண்டினால், தாரணியின்
கவலுறும் தீவிர வாதத்தை
அவலெனத் தூக்கியே எறிந்திட்டால்
குவலயம் போற்றிடும் தெரிமனமே!
64. - தெ. முருகசாமி, புதுவை.

தினைவிதை போட்டவன் தினையறுப்பான்
வினைவிதை ஊன்றிவான் வினையறுப்பான்
எனஉள முன்மொழிக் கேற்பவே
மனமொழி மெய்யதன் வழிநடப்பாய்!
65. - புலவர் ந. ஞானசேகரன், திருலோக்கி.

குதிக்கிறார் ஆள்பவர்! குறைபொன்னால்
விதிக்கிறார் கட்டளை விரட்டுதற்கே!
மிதிக்கிறார் காவலர் ஏழைகளை!
கொதிக்கிறார் மக்களும் எதிர்ப்பதற்கே!
66. - கோ. இளங்கோ பாண்டியன், புதுவை.

படித்திடப் பாடலின் பொருள்புரியும்
நடித்திட நாடகம் நடைவிரியும்
அடித்திட அன்புளம் அகம்வருந்தும்
கடித்திட காய்கனி சுவைததும்பும்!
67. - வெள்ளம்பாக்கம் ம. கேசவன்.

சிறந்தஓர் காரியம் செய்வதென்றால்
மறந்துமே கேட்டினை எண்ணாதே!
பிறந்ததன் நற்பயன் பெருந்தொண்டே!
இறந்தபின் என்றுமே நிலைத்திருப்பாய்!
68. - அரிமா. இளங்கண்ணன், சென்னை.

நிலமெலாம் நீடெழில் நிறைந்திடுமாம்
உலகுயிர் ஓம்பிடும் உயர்மழையால்
பலகலை பாங்குறப் பரிமளிக்கும்
தலமிசைத் தாழ்விலாத் தமிழ்மொழியால்!
69. - வி. சங்கர், கருத்திடுபுத்தூர்.

படித்திடு கல்வியைக் கற்றிடவே
துடித்திடு தாய்மொழி வளர்த்திடவே
படிப்புடன் செந்தமிழ் பாற்றுடவே
பிடிப்புடன் வாழ்ந்திடக் கற்றிடுவோம்.
70.- செ. தமிழ்வாணன், சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

www.padippakam.com



தமிழனின் தண்ணளி தடைப்படுமோ
இமிழ்கடல் ஆர்ப்பினை இடறுவரோ
துமித்துட லாகுமே துடித்தெழுந்தால்
நிமிர்ந்திட வெண்ணினே நிலைகுலைவே!
71. - புலவர். த. ஆறுமுகம், சென்னை.

நெறிமிகு மாமறை நேர்வழியர்
விரிதமிழ் ஆற்றலர் வியன்மதியர்
அறிஞரார் மாமனம் ஆய்ந்துணர்வர்
பொறியெனப் பூந்தமிழ் போற்றுவரே.
72. - சோழமாமல்லன், புதுவை.

கனவெலாம் எந்தமிழ் கழலாகும்
புனலெலாம் எந்தமிழ் புகழ்பாடும்!
நினைவெலாம் எந்தமிழ் நிழலாடும்
மனையெலாம் எந்தமிழ் மாண்பாமே!
73. - ஆதவன், ஆர்க்காடு.

அறிவினைக் கூட்டவே படிக்கின்றோம்
அறிவினால் தொல்லையை அழிக்கின்றோம்
அறிவினால் ஆகிடும் எல்லாமும்
அறிந்திடின் யாவரும் உயர்ந்திடுவோம்.
74. - ஆ. சோதிமலர், விளாப்பாக்கம்.

குலைமிகு தென்னைகள் தோப்பினிலே
மலையென ஓங்கியே நின்றிடவும்
அலையெனக் காற்றிவண் வந்திங்கே
நிலைதனை மாற்றியே சென்றிடுமே!
75. - ப. இராமகிருட்டிணன்.

தினந்தொறும் வாழ்ந்திடும் தமிழ்மொழியே!
மனந்தனில் பாய்கிற மதியொளியே!
கனவிலும் நெஞ்சிலும் பிரிவிலையே!
இனிவரும் வாழ்க்கையில் இடரிலையே!
76. - தையல்நாயகி, சாணிப்பூண்டி.

மனந்தனில் மாண்புகள் நிறைந்தவரே
மனம்நிறை மாந்தராய் நிலைத்திடுவர்
மனமிலா மானிடர் பேரிடரே!
மன்பதை வாழ்தலில் பொருளுண்டோ?
77. - க. சுதா, வீரசோழபுரம்.

கடவுளைச் சாந்தமாய் வணங்கிடுவோம்
உடலினைச் சுத்தமாய் வைத்திடுவோம்
படைகளை அன்பினால் சேர்த்திடுவோம்
தடைகளைத் தள்ளியே வென்றிடுவோம்.
78. - இல்லோடு,சி. சிலம்பரசன்.

மனையுறு கண்மணி, உலகினில்வாழ்
மனையறம் கற்றிடு, மருமகளாய்
அனைவரும் வாழ்ந்திட வழிதனைக் காண்
வினைதனைக் காட்டிட சுற்றமுன்நீ
79. - சோ. முத்துச்செல்வி, செங்கம்.

குறளதன் ஈற்றடி குறுகியதாம்
சிறந்திடக் காட்டிடும் சீர்வழியை
அறம்பொருள் இன்பமும் அறிந்திடுநீ!
திறம்படி வாழ்ந்திடு திருக்குறளால்!
80. - சே. சந்திசேகரன், வேட்டவலம்.

தமிழ்க்கலை வாழ்ந்திட உழைத்துவோம்
தமிழ்மொழி போற்றியே வளர்ந்திடுவோம்
அமிழ்தெனும் தாய்மொழி உயர்ந்திடவே
தமிழ்ச்சுவைப் பாடலை இயற்றிடுவோம்.
81. - செ. தமிழ், மரகதபுரம்.

பலவகைப் பாடலை இயற்றிடவே
நலந்தரும் கல்வியைக் கற்றிடுவோம்
இலட்சியம் நம்மிடம் வளர்த்திடவே
நலம்பல நாட்டினில் செய்திடுவோம்.
82. - து. அரசுகண்ணன், வெங்கந்தூர்.

திரையினில் மூழ்கிய தலைமுறையே
தரையினில் வீழ்ந்திடும் மீனினமோ!
இளமையில் வேட்கையில் பேரலையாய்
விளக்கினில் வீழ்ந்திடும் பூச்சிகளோ!
83. - இரா. காயத்திரி, வெங்கந்தூர்.

செழுந்தமிழ் வாழவே உறுதியாகப்
பழந்தமிழ் நூல்களைக் கருதிடாமல்
மொழியினைத் தாழ்த்திடும் பகைவராலே
அழிந்திடாத் தண்டமிழ் வளர்த்திடுவோம்.
84. - அ. இளங்குமரன், சுரக்குடி.

படைத்திடும் ஒவ்வொரு பாமணியும்
உடைத்திடும் காற்றென ஓங்கவேண்டாம்
தடையுள தீமொழி நாமொதுக்கி
நடையிடல் மேன்மையாம் நானிலத்தே!
85. - இரா. அருமருந்தலைவன், திருமருகல்.

அருளொடு வாழ்தலே அறிவுடைமை!
பொருளொடு வாழ்தலே இலட்சியமா?
இருளொடு வாழ்ந்திட நேருமெனின்
தெருளொடும் ஆழ்வினை ஒளிதருமே.
86. - புலவர். வேங்கடராசன், திருவரங்கம்.

பிறந்தமண் பாழ்படும் செயலுக்கும்
சிறப்புடன் வாதிடும் வழக்கறிஞர்
துறவியே நண்பனைக் கொலைசெய்தால்
அறவழி எப்படி உயிர்வாழும்?
87. - அண்ணா. தருமலிங்கம், புதுவை.

தமிழ்தமி ழென்றவர் தம்வினையால்
தமிழக மக்களைத் தவிக்கவிட்டார்
தமிழினி யென்றுயர் நிலையுறுமோ?
தமிழின மீட்சியெந் நாள்வருமோ?
88. - சு. புகழேந்தி, திருச்சி.

www.padippakam.com



திருக்குறள் கூறிடும் நெறியினிலே
பெருமையாய் வாழ்ந்திடும் எல்லார்க்கும்
திருவெலாம் வாய்த்திடும் உண்மையிதே
திருக்குறள் தந்திடும் நன்மையிதே!
89. - ஆ.வே. இரா, வைரிசெட்டிபாளையம்.

அறிவினை வேட்பவர் சிலரேயாம்
செறிபொருள் சேர்க்குநர் பலராவர்
நெறியொடு வாழ்ந்திட முயலாமல்
வெறிபிடி மாந்தரை என்சொல்வேம்?
90. - சு. இலம்போதரன், சென்னை.

தவந்தனைச் செய்திடின் வரம்பெருகும்
சிவந்தனை நம்பினார் பிறப்பறுப்பார்
அவனருள் பெற்றவர் உய்திடுவார்
குவலயம் போற்றிட வாழ்ந்திடுவர்.
91. - ச. அருள்நேரு, கடலாடி.

உடைந்ததோ வனமின் றடைமழையால்
உடைந்தன ஏரியா றிடங்கொளாது
கடந்துவூர் நீர்புகுந் திடவுமக்கள்
படுந்துயர் அம்மவோ! கொடியதாமே!
92.- கோவி. கலியபெருமாள், அரியாங்குப்பம்.

படிப்பது வாழ்வினில் சிறப்புடைத்து!
படிப்பிலா வாழ்வினில் இருள்சேரும்!
துடிப்புடன் கல்வியைக் கற்றிடுவோம்!
படிப்பினால் வாழ்வினை உயர்த்திடுவோம்!
93. - இ. சங்கீதா, வீரசோழபுரம்.

தமிழினை மூச்செனப் போற்றிடுவாய்
தமிழ்தனை நாடொறும் கற்றிடுவாய்
தமிழனாய் வாழ்ந்திட முனைந்திடுவாய்
தமிழ்ப்பகை நீங்கிடச் செய்திடுவாய்.
94. - இரா. தையல்நாயகி, வேட்டவலம்.

தமிழினை ஒப்பிட முனைந்திடலோ
அமிழ்தமும் ஈடென ஆகிடுமோ!
தமிழராய் வாழ்ந்திட வேண்டுமெனில்
தமிழ்வழிக் கல்வியைப் போற்றிடுவோம்.
95. - இரா. சிவமுருகன், சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

நடிக்கிறார் ஆடுவார் நலமமைய
அடிக்கிறார் பற்பல அறவழியை
படிக்கிறார் சட்டநூல் பலவளத்தை
ஒடிக்கிறார் வாழ்வினை ஒழிக்கவேண்டும்.
96. - புலவர். கோ. தனபால், வில்லியனூர்.

குளங்களும் குட்டையும் ஏரிகளும்
வளந்தரும் நீர்நிலை பெரும்பாலும்
உளமிலா மாக்களோ தூர்த்ததனால்
அளவிலா நீரென அளக்கின்றார்.
97. - அப். தமிழினியன், ஏமப்பேர்.

மடிந்தவர் மீளவும் பேயாக
அடியது பூமியில் தோயாமல்
அடிக்கிற காற்றினில் சேர்ந்துநமை
மடித்திடும் என்பதை மடமையென்க.
98. - மோ. கலாபன், சின்னசேலம்.

நெடுந்தொலை நோக்கிலே குறிக்கொண்டு
கடுவெளி யாவுமே கவினாக
நெடுமரம் மண்ணிலே பலவாக
நடுபவர் நீர்தரும் வான் என்க.
99. - க. திருக்குறளரசு, கல்லக்குறிச்சி.

நடிகனோ தன்மகன் நடிகனாக
நடித்திடச் செய்கிறான் ஆயினந்த
நடிகனோ தன்மகள் நடிகையாக
நடித்திட விட்டிலன் அதுயேனோ?
100.- அப். தமிழ்க்குன்றன், நமச்சிவாயபுரம்.

சிவம்பொருள் கைக்கொளின் குலநாசம்
அவனியில் இப்படி மொழியுண்டாம்!
உவர்துளி சிந்தியோன் செல்வத்தைக்
கவர்பவன் கூண்டுடன் குலநாசம்.
101.- திருவாட்டி. க. கலையரசி, வானவரெட்டி.

ஒருநரி ஊளையின் ஒலிகேட்டுப்
பெருநரிக்கூட்டமே ஒலித்தல்போல்
உருவினைக் காட்டியே பணம்பிடுங்கும்
வருடுதல் கூத்தியர் நிலைகாண்பீர்
102. - அ. இராவணன், நமச்சிவாயபுரம்.

நடிக்கிறாள் காசினை நனிவிரும்பிக்
கடிக்கிறாள் பேச்சினில் தமிழ்மொழியைத்
துடிப்பிலார் கேட்டுமே சுவைக்கின்றார்
படித்தவர் கூடவும் விலக்கிலையே!
103. - அ. இரணியன், நமச்சிவாயபுரம்.

மரங்களோ ஓங்கிட மழைபெருகும்
நிரந்தர செய்தியை அறிந்திருந்தும்
மரங்களை வெட்டுவர் மறியலிலவ்
அரக்கரை ஆட்சியில் அமர்த்தாதே!
104. - திருவாட்டி. இரா. கீதா, விருகாவூர்.

படிக்கிற புத்தகப் பாடத்தில்
கடிக்கிற பொய்யுரை தனைநீக்கிப்
படிப்பவர் மெய்ந்நிலை அறிந்திடவே
படிநிலை கிட்டிட முறைமாற்று.
105. - க. திருக்குறளமுது, கல்லக்குறிச்சி.

எரிநறா காய்ச்சிடும் எத்தர்கள்
எரிநறா காய்ச்சிட ஒத்தவர்கள்
எரிநறா நச்சிடும் பித்தர்கள்
பெரியவர் என்பது பேதைமையே!
106. - அய்யா. திருக்குறள் நம்பி, நமச்சிவாயபுரம்.

www.padippakam.com



மலையினை வாயினில் வைத்தடக்கும்
கொலைக்கொடி மாக்களே கோட்டைக்குள்
வலைஞரே மீன்களை அரிப்பதுபோல்
இலைத்தலோ இன்றியே வாருகின்றார்.

107. **- மோ. கலாநிதி, தேவபாண்டலம்.**

அரசினர் பள்ளியின் ஆசான்கள்
தரமிகு கல்வியைத் தம்பிள்ளை
மலைவறப் பெற்றிட வேற்றிடந்தான்
பிரமுகர் என்பவர் ஈங்கெதற்கு?

**108.- திருவாட்டி பெரியம்மாள், இரிசிவந்தியம்.**

தொழிலினைத் தெய்வமாய் மதியாதாள்
எழிலினைக் காட்டியே பணம்வாங்கும்
இழிதொழில் வேசியை ஒப்பளென
மொழிதலில் எவ்வகை முரணாகும்?

109. **- அ. தமிழ்த்தேனி, கல்லக்குறிச்சி.**

உயிரினைக் கொன்றிடும் கறிக்கடையில்
உயிர்ப்புனல் கண்டதும் துடிக்கின்ற
உயிர்நிலை பெற்றவர் உள்ளதனால்
எயிலினைத் தாண்டியே இருப்பதுமேல்!

110. **- க. திருக்குறட்பாவை, ஏமப்பேர்.**

அளவினில் அங்குல அகலத்தில்
உளமிலாத் தன்மையில் துணிகட்டிக்
களமென மேனியின் உறுப்புகளை
உளர்வினை செய்கிறாய் நடிகையேசீ!

111. **- அ. தமிழநம்பி, கல்லக்குறிச்சி.**

இடுக்கியில் மாட்டிய எலியினைப்போல்
அடுக்கடுக் காய்த்துயர் சூழ்ந்திடினும்
தடுக்கியும் தப்புகள் புரிந்திடாமல்,
மிடுக்குடன் துன்பியல் தாங்கிடுவா!

112. **- த. கருணைச்சாமி, தேனி.**

உழைத்திரு உண்மையில் உவகையுடன்
பிழைத்திடு பெற்றதில் பெருமையுடன்
தழைத்திடும் உன்னிலை தலைநிமிரும்
அழைத்திடும் முன்,மன அமைதிவரும்!

113. **- கவி. சக்கர கண்ணபிரான், சென்னை.**

அறிவிலா மாக்களை அமைச்சராக்கும்
நெறிபிறழ் போக்கினைத் தமிழ்நாட்டார்
நெறியென ஆக்கிடும் இழிபோக்கால்
எரிபுனம் ஆகுதே தமிழ்நாடு.

114. **- அ. தமிழ்நெஞ்சன்., கல்லக்குறிச்சி.**

கொலைப்பலி நாய்களால் "குட்டி"யவன்
தலைப்பலி தந்தனன்; "தலிப்பான்"நாய்
குலையழி குத்தெனக் குடல்பிதுங்கி
விலையளி நாளதும் விரைந்திடுமே!

115. **- கவிராசு, சென்னை.**

மழையினால் வெள்ளமோ பெருகியோட
விளைபயிர் மூழ்கின! காடுமேடு
கலையுமே மாறின! கலங்காதீர்!
நிலைபெற வாழ்வினில் வழிகாண்பீர்!

116. **- க. சண்முகம், தரங்கம்பட்டி.**

புலனறி யாதவொன் றிருப்பதாக
நிலமுதல் கண்டநம் செந்தமிழர்
உலர்மலர் ஒப்பவே அறிவழிந்து
நிலைதடு மாறிட நோந்ததுவே!

117. **- த. குமாரசாமி எசுதர்,கருவூர்.**

மழையினால் மண்ணகம் சிறந்திடுமே!
உழைப்பினால் உள்ளமும் மகிழ்ந்திடுமே!
தழைத்திடும் வாழ்வினை அடைந்திடவே!
உழைத்திட முந்துக உயர்தமிழா!

**118.- ம. இளையாப்பிள்ளை, வீரசோழபுரம்.**

அளவிலாச் செல்வமும் இருந்திடலால்
உளத்தினில் ஆணவம் கொண்டிடுவர்
உளமெலாம் தீநெறி பெற்றிடுவர்
களத்தினில் தோல்வியைக் கண்டிடுவர்.

119. **- இரா. தெய்வீகன், சங்கராபுரம்.**

வளமொடு வாழ்பவர் உளத்தினிலே
வளம்நிறை எண்ணமே உதித்திடலை
வளம்நிறை மாநில தமிழகத்தில்
வளவனார் வாழ்த்திட அறிந்திடுவீர்!

**120.- இரா. தயாபரன், பகண்டை கூட்டுரோடு.**

நிலத்தவர் செய்திடும் தவற்றினையும்
உலகினர் ஆய்வினால் அறிந்திடுவர்
கலக்கமே காரணம் என்றதனை
நலத்தவர் எண்ணிடல் நன்றெனலாம்.

121. **- ஆ. இரவிச்சந்திரன், பழவந்தாங்கல்.**

திருவருள் வேண்டியே வணங்குகிறேன்
திருந்திடும் பக்குவம் அளித்திடுவாய்!
அருள்நிறை அன்பினைப் பெற்றிடவே
இருளிலா வாழ்வினை ஈந்திடுவாய்!

122. **- க. உதயபாலன், பனையபுரம்.**

இடருறு மாந்தரின் இடர்களையத்
தடம்பல கண்டிடல் தகுநெறியே
கடனெனக் கல்வியால் அறிந்திடவே
உடலியல் உளவியல் உதவிடுமே!

123. **- க. பாலமுருகன், பனையபுரம்.**

நலமுடன் நாமிருந் திடமழையும்
உலகெலாம் பெய்திட மகிழ்வுடனே
குலத்தவர் கூடியே குலவிடவே
நலம்பல வாய்த்திட வசித்திடுவோம்!

124. **- ச. சத்தியா, வடலூர்.**

www.padippakam.com



துதித்திடும் பேற்றினை உடையவராம்
உதித்திடும் உத்தம் தலைவரெலாம்
மதித்திட வேண்டிய தூயரவர்
உதித்திடும் சூரிய சுடரொளியே!
125. - இர. சாலினி, பழவந்தாங்கல்.

இளஞ்சிறார் நற்றமிழ் அறிந்துளஒர்
வளம்நிறை தாயினைப் பெற்றிருப்பின்
களம்பல கண்டிட உரமளிப்பார்
வளம்நிறை வாழ்வினை வகுத்தளிப்பார்.
126. - தி. தமிழ்க்கொடி, ஆசனூர்.

அணுவியல் ஆய்வினால் உயர்ந்தவரே!
அணுகிடும் ஆற்றலில் சிறந்தவரே!
அணுவிலும் நின்புகழ் கலந்திடுமே!
அணுத்திரள் ஒளியென ஒளிர்ந்திடுவீர்!
127. - கு. இராசமூர்த்தி, வீரசோழபுரம்.

உலகிலே தாழ்ந்தவர் எவரெனவும்
உலகிலே ஞானியர் எவரெனவும்
உலகுளார் ஆய்ந்திட முயன்றிடினே
இலக்கியம் கண்டிடத் தெளிந்திடலாம்.
128. - இரா. அரங்கநாதன், வீரசோழபுரம்.

நிகழ்வன நன்றென உணர்ந்திடுவோர்
நிகழ்ந்திடும் கூற்றினைப் புகழ்ந்திடுவர்
திகழ்ந்திடும் ஆற்றலின் திறத்தினாலே
புகழ்ந்திடும் பேற்றினைப் பெற்றிடுவோம்!
129. - கு. சுசீலா குப்புசாமி, வீரசோழபுரம்.

அரசியல் வானிலே மிளிர்ந்திடவும்
தரத்திலே மீத்திறன் அடைந்திடவும்
உரமுளார் செந்தமிழ் உணர்ந்தவரே!
தரமுளார் ஏற்றிட மறுத்திடாரே!
130. - ஆ. இராசு, இரிசிவந்தியம்.

பயிற்சியில் பாங்குடன் நடந்திடவே
பயில்பவர் வாழ்விலே சிறந்திடுவர்
பயிற்சியில் பாங்கினை இழந்திடுவோர்
பயின்றிடல் தாழ்வென இகழ்ந்திடுவர்.
131. - கு. செல்வக்குமரன், வீரசோழபுரம்.

முயல்பவர் முற்றிலும் முகிழ்த்திடுவர்
இயல்பினில் முத்தெனத் திகழ்ந்திடுவர்
முயற்சியின் ஆக்கமே மகிழ்வெனவே
முயன்றிடும் தம்கடன் அறிந்திடுவர்.
132. - செ. இராசலட்சுமி, கல்லக்குறிச்சி.

தமிழினத் தோன்றலே! தமிழ்நெஞ்சே!
தமிழினம் சீருற வழியமைக்கும்
தமிழறி மாந்தராய் நீயிருக்கத்
தமிழினம் என்றுமே தாழ்ந்திடாதே!
133. - க. கார்த்திகேயன், பனையபுரம்.

பயிற்சியில் பண்பினைப் பெற்றிடவும்
பயில்வதில் முன்னிலை அடைந்திடவும்
பயிலகம் முத்தென முகிழ்த்திடவும்
பயிலுவோர் நாமெலாம் முயன்றிடுவோம்!
134. - த. மகாலட்சுமி, வீரசோழபுரம்.

திறனறி மாந்தரும் திகைத்திடுவர்
திறனறி ஆய்விலே திளைத்திடுவர்
அறநெறி தண்டமிழ் இலக்கியத்தில்
திறன்மிகு சிந்தனை பெற்றிடுவோம்!
135. - குப்புசாமி, வீரசோழபுரம்.

இருபது கொள்கைகள் உணர்ந்தவராய்க்
கருதிய காரியம் முடிப்பவராய்க்
குருதியை நாட்டினுக் களித்தவராய்
அருந்தவ இந்திரா திகழ்ந்தனரே!
136.- தி. உசா திருநாவுக்கரசு, திருவாமாத்தூர்.

மனத்தினில் மாண்புகள் நிறைந்தவரே
மனம்நிறை மாந்தராய் நிலைத்திடுவர்
மனமிலா மானிடர் பேரிடரே!
மனத்தினில் மாண்புகள் நிறைத்திடுவோம்!
137. - தி. கதிரவன், திருவாமாத்தூர்.

பிறமொழி ஆய்தலை அறிந்திடலை
திறன்வளர் நன்முயற் சியென்றிடலாம்
பிறமொழி கண்டதைத் தாய்த்தமிழில்
திறமுற ஆக்கிடல் நலம்பயக்கும்.
138. - தி. மணிமேகலை, திருவாமாத்தூர்.

அருங்கலை பற்பல தெரிந்திடினும்
விரும்பிடும் ஓரிரு கலைகளிலே
இருந்திடும் நுண்திறன் அறிந்திடலே
கரும்பென ஈர்த்திடும் திறனளிக்கும்!
139. - செந்தில்குமார், செஞ்சிக்கோட்டை.

கணினியில் நுட்பமாய்க் கணித்திடலாம்!
பணியிலே மீத்திறன் அடைந்திடலாம்!
அணிதிகழ் ஆய்வினை நிகழ்த்திடலாம்!
மணியெனப் பண்பினில் உயர்ந்திடலாம்!
140.- செ. பொன்னம்மாள், செஞ்சிக்கோட்டை.

வருகிற தேர்தலில் தெளிவுடனே
தருகிற தீர்வினால் நலம்விளையும்
திருவினைச் செய்திடத் தமிழினமும்
திருவுளம் கொண்டிடல் நலம்பயக்கும்.
141. - ச. சாந்தி, இரிசிவந்தியம்.

அறிஞரின் ஆற்றலே நலம்பயக்கும்
அறிவியல் ஆய்வினால் வளம்சேரும்!
அறிந்திடும் மாந்தரே உயர்வடைவர்!
அறிந்திடார் வாழ்விலே உயர்ந்திடாரே!
142. - மா. மோகன்குமார், இரிசிவந்தியம்.

படிப்பகம்

www.padippakam.com



தமிழினில் இன்பமாய்ப் பேசிடவும்
தமிழினில் இன்னுரை தந்திடவும்
தமிழின மாந்தரும் தவறிடினே
தமிழினம் தாழ்ந்திட வழிவகுக்கும்.
143. - அர. கிரிசாநாதன், இரிசிவந்தியம்.

கருதிய எண்ணமே கவினுறவும்
கருத்தினை ஏற்புடைத் தாக்கிடவும்
உருத்திடும் உள்ளமே தெளிவுறவும்
பெருந்துணை யாகிடும் மொழியறிவே!
144. - அர. இளம்பூரணன், இராமநத்தம்.

எளியராய்த் தோன்றிய மனிதருமே
தெளிந்திடும் உள்ளமே உடையவராய்த்
துளியுமே தன்னலம் இலாதவராய்
அளித்திடு நன்கொடை விடுதலையாம்!
145. - அர. அருண்குமார், இரிசிவந்தியம்.

கனவிலே உன்னையே சேர்ந்திருப்பேன்
நினைவினில் உன்னையே நினைத்திருப்பேன்
கனவுகள் என்றுமே அழிவதில்லை
நினைவுகள் என்றுமே மறைவதில்லை.
146.- முத்தமிழ் நண்பர்கள், தி.கொ.அ.க.கல்லூரி.

கழனியில் காட்டினில் மழைவெயிலில்
உழைப்பவர் வாழ்வினில் உயர்ந்திடட்டும்
உழைப்பவர் வாழ்வினைச் சுரண்டியதால்
கொழுத்தவர் வாழ்வது தொலைந்திடட்டும்.
147. - ச.ந. இளங்குமரன், நாகலாபுரம்.

குழவியர் இன்பமும் கண்டவராம்
குழவியர் இன்புற உழைத்தவராம்
குழவியர் உள்ளமுங் கொண்டவராம்
குழவியாய் இந்தியா போற்றுகிறார்.
148. - இர. தெய்வானை, வீரசோழபுரம்.

உளவியல் கற்றிட இடரகலும்
உளவியல் ஆய்வினால் நலம்சிறக்கும்
உளவியல் ஆய்ந்திடும் திறத்தினாலே
வளம்பல பெற்றிடும் உலகதுவே!
149. - கோ. இராசலட்சுமி, வீரசோழபுரம்.

மனிதனில் இத்தனை சாதிகளா?
தினமினி சாதியை ஒழித்திடவே
மனிதனின் ஒற்றுமை தழைத்திடவே
இனிமையை நாட்டினில் புகுத்திடுவாய்.
150.- இரா. செந்தில்குமார், சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

மனங்கவர் மாந்தரின் மதிவளமே
இனநலம் காத்திட உதவியதை
மனம்நிறை மக்களும் அறிந்திடினே
மனமுவந் தேற்றிடத் தவறுவரோ?
151. - கொட்டையக்கவுண்டர், வீரசோழபுரம்.

ஒரு"தமிழ் மாமணி" என்றுனக்கு
விருதினைத் தந்தனர் எனக்கேட்டுக்
கருவுறு ஞான்றினும் பெரிதுவந்தாள்
அரும்புகழ் செந்தமிழ் அன்னையளே!
152.- ஆய்வறிஞர் இராசபாரதி, திருவண்ணாமலை.

தெருவெலாம் தாய்மொழி கற்பிப்போம்
விரும்பியே நூலினைக் கற்றிடுவோம்
விரைவினில் செம்மொழி உயர்ந்துவிட்டால்
பெருமையில் பாரதி திளைத்திடுவார்.
153.- த. செல்வகுமார், சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

கடுத்திடும் வெய்யிலில் உழைத்தாலும்
குடித்திடக் கஞ்சியும் இல்லாமல்
அடிமையாய் அஞ்சியே வாழ்ந்தொழியும்
நெடுந்துயர் நீங்கிடும் நாள்வருமோ?
154. - து. விவேகானந்தன், புதுவை.

மலையினைப் போல்வள முடன்வாழக்
கலைபல கற்றிடு கலங்கிடாதே
நிலையிலா வாழ்விலே மறையாமல்
நிலைத்திடச் செய்கவே உன்பெயரை!
155. - இல. தனுசு, தென்நெற்குணம்.

அழகுடன் ஆதவன் எழுந்திடவே
உழுதிடும் மாட்டினைச் சீராட்டி
உழவரைப் போற்றியே மகிழ்ச்சியாய்நாம்
முழங்குவோம் பொங்கலோ பொங்கலென்று.
156. - மு. இராசா, தென்நெற்குணம்.

மதியணி மன்னனின் ஆதிரைநாள்
மதிநிறை மாயனின் ஏகதசம்
விதிவலி மாருதி மூலநன்னாள்
கதிகொள காட்டிடும் மேன்மையதே!
157.- ந. நித்தியானந்தம், திருக்கழுக்குன்றம்.

குனிந்துநீ வாழ்ந்தது போதுமடா
துணிவுடன் வாழ்ந்திட வேண்டுமடா
பணிவுடன், பூத்திடும் புத்தாண்டில்
மனிதனாய் வாழ்ந்துநீ மகிழ்ந்திடடா!
158. - க. சத்தீசுகுமார், தென்நெற்குணம்.

கனியென இன்பளி இலக்கியமே
இனியன பற்பல இயம்பிடலைத்
தனியனாய் இன்புறல் சுவையிலதே
கனிச்சுவை கூடிடப் பகர்ந்திடுவோம்!
159. - இரா. சதாசிவம், மண்டகப்பாடி.

அழிவிலா நற்பணி அறமதுதான்
பழியிலா நல்லிசை நாட்டிடுமே!
ஒழிவிலா துண்மையில் உழைப்பதுதான்
எழிலினை வாழ்வினில் கூட்டிடுமே!
160. - சு. பொழிலன், கோலியனூர்.

படிப்பகம்

www.padippakam.com



கனிந்திரு காசினி போற்றிடுமே!
பணிந்திரு பாரதும் ஏற்றிடுமே!
தணிந்திரு தீமைகள் தவிர்ந்திடுமே!
துணிந்திரு துன்பமும் தொலைந்திடுமே!
161. - பா. கல்பனா, பழைய கருவாட்சி.

இருளினை வாழ்வினில் விரட்டிடவே
பருவமே பார்த்துநீ செயலாற்று!
உருவமாய் உன்னுடன் துணையிருந்தே
அருளினை ஈசனே தந்திடுவார்.
162. - அ. செயபால், சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

நினைவினில் நின்றவள் எழிலினைநான்
கனவினில் கண்டுளம் மகிழ்கின்றேன்
மனதினில் மல்லிகை யாயமைந்து
மணந்திடும் நாளினை எதிர்பார்த்து.
163. - அ. சோலைத்தென்றல், தென்நெற்குணம்.

கறையெனும் தன்னலம் சிறிதுமின்றி
நறைதமிழ்த் தொண்டினைப் புரிபவர்க்கு
முறைப்படி தேடியே விருதுவரும்
இறைவிழி யானதற் குரியகாட்டே!
164. - பாவலர் கருமலைத்தமிழாழன், ஒசூர்.

மனத்தினில் மாசினை ஏந்தாதே!
இனத்தினில் தீயரைச் சேர்க்காதே!
தினந்தினம் சோர்வினில் திளைக்காதே!
கனவிலும் தீமையைக் கருதாதே!
165. - பா. கலைச்செல்வம், கோலியனூர்.

எனக்குறும் இல்லவள் இனியவளே!
எனக்குறு பிள்ளையர் இனியவரே!
எனக்குறு நண்பரும் இனியவரே!
எனக்குறு வாழ்வதும் இனியதுவே!
166. - சி. இளங்கண்ணன், கோலியனூர்.

எனக்கொரு காலமும் வாராதோ?
எனமனம் ஏங்கியே கிடக்காதே!
தினந்தொறும் உன்அருங் காலமதே!
உணர்ந்திதை ஓங்கிட உழைத்திடடா!
167. - பா. விசயலட்சுமி, கோலியனூர்.

உளந்தனில் தீயினை வைத்தேதான்
நலங்கெட வாழ்வது நலலதுவோ?
பலருனைப் போற்றிட வேண்டுமெனில்
நிலவென இன்னொளி வீசிடுவாய்!
168. - கி. தசரதராமன், கடலி.

சிறப்பினைச் சேர்த்திட வேண்டுமெனில்
பொறுப்புடன் நின்கடன் புரிவாயே!
வெறுப்புடன் நீயுமே வினைசெய்தால்
வெறுத்துனைத் தள்ளிடும் வியனுலகே!
169. - சி. பாலகிருட்டினன், கோலியனூர்.

'எனக்கென யாவுமே' என்றெண்ணித்
தனக்கென வாழ்வதில் பயனேது?
உனக்கென ஓரிடம் உலகினிலே
கணக்கிடப் பாதையை நீமாற்று!
170. - க. செயந்தி, பனங்குப்பம்.

திரைதொறும் தோன்றியே பிடிஅளவாம்
அரையினை ஆட்டியே ஈட்டிடுநீ
புரையிலா மாத்தமிழ்ப் பண்பெதிர்த்துக்
குரைத்தனை! நாடுவிட் டோடிவிடு!
171. - திருவாணன், திண்டுக்கல்.

மதியது மாண்புறு துணையானால்
விதியது வந்துனை என்செய்யும்?
எதிர்வரும் இன்னலை எதிர்த்தேநில்!
எதிர்வரும் யாவுமே இனிதாகும்.
172. - தமிழமுதன், இராம்பாக்கம்.

உழுபவன் கண்களில் நீர்வடிந்தால்
உழுதொழில் ஓங்கியே உயர்வுறுமா?
உழுவன் வெந்துயர் ஓட்டுவதே
பழுதிலா ஆட்சியின் பணியென்பேன்!
173. - வீ. சேகர், பழைய கருவாட்சி.

தமிழ்ப்பெயர் தாங்கிடு, தமிழராக!
தமிழிசை கேட்டிடு, தமிழ்வாழ!
தமிழ்வழிக் கல்வியில் தான் வளர்வாய்!
தமிழ்மொழி போற்றினால் தான்வாழ்வாய்!
174.- தா. அன்புவாணன் வெற்றிச்செல்வி, காஞ்சிபுரம்.

தமிழ்வழிப் பள்ளியில் படிக்கின்றேன்
தமிழ்வழி ஏனெனப் பதைக்கின்றீர்
தமிழரே நற்றமிழ் நாட்டோரே
தமிழரா நீங்களும் சொல்லுகவே!
175. - ஆ. முகிலரசி, ஆர்க்காடு.

அழிக்கிறோம் தாய்த்தமிழ்க் கல்வியினை
பழிக்கிறோம் நம்மின ஒற்றுமையை
வழிகிறோம் கூட்டணி வெற்றிக்கே
விழிக்கிறோம் மீண்டிடும் வழியின்றி!
176. - தி.ப. சண்முகம், திருக்காடுதுரை.

வழிவழி நூற்படி வாழ்வினிலே
ஒழுகிடும் தாய்நிலை நிலவுங்கால்
இழிநிலை முற்றிலும் ஒழிந்திடுமே
எழில்நிலை எங்கெனும் தோன்றிடுமே!
177. - பெருமாங்குப்பம் சா. சம்பத்து.

வருவது காசெனின் வாய்திறப்பீர்!
தருபவர் யாரெனுந் தாங்கருதீர்!
பெருந்துயர் பின்வரப் பிழைசெய்வீர்
வருந்துயர் போக்கிடும் வழிதமிழே!
178. - வானவன், வெங்காலூர்.

www.padippakam.com



கொடுப்பவர் இல்லை?கொள் வார்இலையால்
அடிப்படை? சம்பளம் உயர்ந்ததனால்
கொடு!பிடி! என்கிற கையூட்டும்
விடு! மிகு தேவைகள் குறைத்திட்டே.
179.- பித்தளை வணிகன் மதுரை மாறன், திண்டுக்கல்.

தமிழ்மொழி அன்பிலே உயிர்வாழ்வேன்
தமிழ்மொழி பண்பிலே உயர்ந்திடுவேன்
தமிழ்மொழி என்றுமே போற்றிடுவேன்
தமிழ்மொழி என்றுமே பேசிடுவேன்.
180.- வி. கோபால கிருட்டினன், தி.கொ.அ.க.கல்லூரி

குழவியர் கொஞ்சிடும் நிலையினிலே
பழமெனத் தீந்தமிழ் மொழியினிலே
பழமொழி கூறிடும் கருத்தினையே
குழவியர் பெற்றிட முனைந்திடுவோம்!
181. - இர. கணேசன், பழவந்தாங்கல்.

பழந்தமிழ்ச் சொல்லழ(கு) உணர்ந்திடுவோம்
பழச்சுவை தந்திடும் தமிழினையே
பழகிடும் தோழனாய்க் கொண்டிடுவோம்
பழந்தமிழ் மண்ணினில் வசித்திடுவோம்!
182. - கி. பாண்டுரங்கன், இரிசிவந்தியம்.

அமிழ்தெனும் தாய்மொழி உயர்ந்திடவே
தமிழ்மொழி கற்றிட முனைந்திடுவோம்
தமிழ்க்கவி பாடலை இயற்றிடவே
தமிழ்த்துறை வாழ்ந்திட உழைத்திடுவோம்.
183. - க. காசிராசன், சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

மயங்கினேன் நற்றமிழ் நாயக!நீ
தயக்கமில் வாழ்வினைத் தந்திட்டால்
வயமுறும் என்னுளம்; நல்லுயிரோ
இயங்கிடும்; உன்னுளத் தெனையேற்பாய்.
184.- க. அன்புக்கோகிலா, சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

மழைத்துளி மண்ணதில் விழுவதனால்
உழைப்பவர் ஏர்தனைப் பூட்டட்டும்
பிழைப்பவர் பார்தனில் சிறக்கட்டும்
தழைப்புடன் நெற்பயிர் வளரட்டும்.
185. - த. சாந்தினி பாய், சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

கனவிலும் நின்முகம் கண்டதில்லை
நனவிலும் நின்முகம் நினைத்ததில்லை
மனமதும் கண்களும் உறங்கவில்லை
மனமது நின்முகம் மறக்கவில்லை.
186. - சு. சௌந்தரராசன், சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

பிறப்பினில் ஒற்றுமை காத்திடுவாய்
குறையினை நீக்கியே வாழ்ந்திடுவாய்
இறைவனைக் காலையில் வணங்கிடுவாய்
முறையுடன் கல்வியைக் கற்றிடுவாய்
187.- அ. வெங்கடேசன், சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

எடையிலா அன்பினில் என்நெஞ்சைத்
தொடுகிறாய் உன்விழி யினாலேஎத்
தடைகளை யும்கடந் துவருவேனே
விடியலாம் நீதினம் இருப்பதனால்
188. - இரா. தையுநாயகி, வேட்டவலம்.

பயனினை ஏற்றிடாக் கார்முகிலோ
வயலினை வாழ்ந்திடச் செய்கிறதே!
உயர்தமிழ் வாழ்வினை வளர்க்கும்நம்
அயர்விலா மாந்தரை வணங்கிடுவோம்.
189. - ஏ. சுமதி, சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

கருவினில் தங்கிய பொன்மகளைத்
தெருவினில் தாய்மகள் வீசுகிறாள்!
இருவரும் மக்களே அறிந்திடுவாய்!
அருமுறை ஏற்றிடும் சமுதாயம்.
190. - வ. அரிகிருட்டினன், வானூர்.

மழையினால் வெந்துய ருழந்தவர்க்கு
வழங்கிட வந்துள பொருள்களிலே
விழுங்குவார் பாதியை இடையிலுள்ளார்
அழும்புசெய் வாரிவர் எப்பிறப்போ?
191. - கூத்தரசன், புதுவை.

தமிழினைத் தாயென வணங்கிடுவோம்
தமிழினைத் தேனெனச் சுவைத்திடுவோம்
தமிழினைச் செம்மொழி என்றாரைத்
தமிழினம் கண்ணெனப் போற்றிடுமாம்.
192.- வ. அரிகிருட்டினன், சி.பா.சு.தமிழ்க் கல்லூரி.

அறிவியல் ஆற்றலை உணர்ந்திடுவோம்
அறிவினைச் செவ்வனே வளர்த்திடுவோம்!
அறிந்ததைத் தண்டமி ழாக்கிடுவோம்!
அறிவியல் போற்றிட அறிந்திடுவோம்!
193. - ஆ. அகிலா, கள்ளக்குறிச்சி.

உளவியல் உன்னதம் அறிந்திடுவோம்
தளர்வினை அவ்வழி போக்கிடுவோம்
வளர்ந்திடும் எண்ணமும் நம்மிடையே
அளவிலா ஆற்றலைத் தந்திடுமே!
194. - அ. இரேவதி, கள்ளக்குறிச்சி.

அறிவுடன் ஆற்றலும் பெருகிடவே
செறிவுடன் கற்றிடல் நலம்பயக்கும்!
நெறியுடன் வாழ்ந்திடின் நிலைபெறலாம்
நெறியிலாப் போக்கினால் பயனிலையே!
195. - பா. மாயக்கண்ணன், கள்ளக்குறிச்சி.

திருநிறை செம்மொழி எம்மொழியே!
திருக்குறள் தந்ததும் செந்தமிழே!
திருவளர் சீருடைத் திருநகரில்
திருவள வப்பெருங் குடிக்கொழுந்தே!
196. - செ. பாலமுருகன், கள்ளக்குறிச்சி.

www.padippakam.com



இணையிலா இன்பமே இலக்கியமாம்
துணையெனத் தோன்றிடும் இலக்கணமாம்
பிணையெனக் கூறிடல் பொருத்தமுறும்
துணைவியும் இவ்விதம் அறிந்திடுவீர்!
197. - ம. ஏழுமலை, கள்ளக்குறிச்சி.

மழையினைப் பெற்றிடும் உழவருமே
உழைப்பினைக் கூட்டிடல் சிறப்புடைத்தாம்
இழையிழை நீர்த்துளி அளித்திடுமே
தழைத்திடும் வாழ்வினை உலகினிலே!
198. - சா. அம்சத்கான், கள்ளக்குறிச்சி.

தழைத்திடப் பூமியில் உயிர்களுமே
மழையினை வேண்டிய மாநிலத்தில்
மழைமுகில் வெள்ளமாய்க் கொட்டியதே
பிழைத்திட மக்களும் தவிக்கின்றார்.
199. - வே. முத்துலக்குமி, திருச்சிராப்பள்ளி.

நிலவினைத் தொட்டிட நினைத்திடவும்
உலகினை உன்னுடன் நிறுத்திடவும்
சிலபல எண்ணமும் ஓங்கிடவும்
பலகலை கொண்டிடும் அறிவியலே!
200. - பா. இராசசேகரன், கள்ளக்குறிச்சி.

பணம்; நகை மற்றவை பெரிதென,எக்
கணத்திலும் எண்ணிடா உறுதியுடன்
குணநலம் சேர்ந்துள குடும்பத்தில்
மணமகள் தேர்ந்தெடு மணமகனே!
201. - கவிஞர் து. சுப்பராயலு, பெரியகுளம்.

குளித்திடச் சோம்பலில் நினைப்பாயேல்
களித்திடும் வாழ்வது வாராதே!
தளிர்த்திட வேண்டுமேல் சோர்வறுத்தே
பளிச்சிடப் பாரினில் உழைப்பாயே!
202. - வீ. சே. வானதி, பழைய கருவாட்சி.

தமிழ்மகள் கற்பொரு கடைச்சரக்கா?
தமிழ்மகள் கற்பினைப் பழித்துரைத்தாய்!
தமிழ்மகள் யாரென அறியாயோ?
தமிழ்மகள் தீயெனச் சுட்டிடுவாள்!
203. - அர. நதியா, பனமலைப்பேட்டை.

திருமணம் ஆனதும் குழவியொன்றை
மருமகள் ஈன்றிட வில்லையெனில்
பொருப்புறழ் இன்னலை அவள்மீது
விருப்புடன் வைப்பவர் இங்குளரே!
204. - வீ. வில்வநாதன், வெங்காலூர்.

உரிமையென் றேயுயர் குரலெடுத்தே
நரிகளும் நாய்களும் ஊளையிடும்
கரியொரு காலினா லிடறியபின்
விரிவுரை கூறுதல் விந்தைமிகும்
205. - மு.வே. கங்காதரன், சென்னை.

படிப்பதே நல்லது பல்வகையில்
படிப்புகள் சிந்தனைப் பொழிலாகும்;
படிப்பதால் பண்படும் மனமேதான்
படிப்புதான் மெய்யுடை பெருஞ்செல்வம்!
206. - சீனி. சிவானந்தம், சென்னை.

கயவராய்ச் சாதியின் பெயர்சொல்லி
அயலவர் காலடி அரவணைத்தே
சுயநலக் கும்பலின் சூழ்ச்சியினால்
உயரினும் சாதலே உயர்வாகும்.
207. - குமரிச்செழியன், சென்னை.

படிறிலாக் கற்பினைப் பொருட்படுத்தா
விடுதியில் ஆடுவார் பொருள் குறித்தே
நடிகையர் சாடுதல் நகையுடைத்தே
குடிமுறைப் பேணுவார் கனன்றெழுவார்.
208. - மு. இராம. கனகராசன், புதுச்சேரி.

துரும்பினைப் போல்உடல் சிறுத்திருந்தும்
குருதியைத் தந்திட வந்தாய்நீ
உறுதியாய் அன்புடன் முனைந்திட்ட
திறத்தினை என்றுமே போற்றிடுவோம்!
209. - க. காசிராசன், விழுப்புரம்.

இலக்கியம் கூறிடும் நெறியினையே
இலக்கெனக் கொண்டிடல் சிறப்புடைத்தாம்
இலக்கணம் எவ்விதம் வேண்டுவதோ
இலக்குமே அவ்விதம் வேண்டியதாம்!
210. - மா. சரவணன், கள்ளக்குறிச்சி.

அறிவிலா மாக்களை அமைச்சரெனும்
நெறியிலாப் போக்கினை எந்நாடும்
நெறியெனக் கொண்டிடின் வருங்காலம்
வறிதென வீழ்ந்திடும் அறிந்திடுக!
211. - அ. குறள்நெறியன், கள்ளக்குறிச்சி.

கனவினை நெஞ்சினில் சுமந்தேனே
நனவினில் இன்புடன் வாழ்வதற்கே!
மனமிலார் காதலைப் பிரித்தனரே
சினத்துடன் சாதலை ஏற்றேனே!
212. - சு. தென்றலரசன், திருக்கோவிலூர்.

நினைவிலே நின்றவள் எந்நாளும்
மனத்திலே தெய்வமாய்க் காட்சிதந்து
தினந்தினம் வேதனை தந்தவளை
மணந்திடும் காலமும் வாராதோ?
213. - ம. சுப்பிரமணியன், தென்நெற்குணம்.

தமிழனே சோதனை கடந்திடுவாய்
தமிழனே சாதனை படைத்திடுவாய்
தமிழனே வேதனை மறந்திடுவாய்
தமிழனே பாரினை உயர்த்திடுவாய்.
214. - ஆ. புகழேந்தி, காட்டுஎடையார்.

படிப்பகம்

www.padippakam.com



இறைவனை வேண்டியே வரம்பெறுவோம்
இறைவனை என்றுமே நினைத்திடுவோம்
இறைவனைச் சிந்தனை செய்திடுவோம்
குறைவிலா வாழ்வினைப் பெற்றிடுவோம்.
215. - ஆ. விசயகுமார், வீரசோழபுரம்.

தமிழ்மொழி கற்றிடும் மாணவர்கள்
அமிழ்தென நாவிலே சுவைத்திடுவர்
தமிழ்மொழி போலொரு மொழியிலையாம்
தமிழ்மொழி பாரினை உயர்த்திடுமே!
216. - கோ. ஆறுமுகம், காட்டுஎடையார்.

உறவென நானுனை நினைத்ததினால்
மறந்திட என்மனம் மறுக்கிறதே!
திறந்திடு வாய்மனக் கதவுதனை!
அறத்தொடு நிற்கிறேன் அறிந்திடுக!
217. - ஆ. புகழேந்தி, காட்டுஎடையார்.

எழில்வளம் பொங்கிய வயல்களில்நீர்!
பொழில்நலம் சூழ்பல சிற்றூர்பாழ்!
விழுந்தன வீடுகள் விலங்கினங்கள்!
மொழிந்திடின் வெள்ளமோ கொடுங்கூற்றம்!
218. - புலவர். உ.லோ. சுப்பிரமணியன்.

விரைந்திடும் தீவினை விளைவாலே
கரைந்திடும் நம்மினம் நாடோறும்
புரைமிகும் போக்கினைப் போக்கிடவே
தரைதனை ஓர்நிலை யாக்கிடுங்கள்.
219. - பாவலர் இரத்தின. சின்னசாமி.

முடிந்ததை தந்திடும் நற்பணியைத்
துடிப்புடன் கொள்பவர் புகழ்முடியில்
தடையிலா(து) ஏறுவர் என்பதனைப்
படிமிசை என்றுமே நினைத்திடுவீர்.
220. - வாழியூர் வே. இராசவேலன்.

மலரது வாடினால் மணமில்லை
உளமது வாடினால் மகிழ்வில்லை
களமதில் தோற்றிடின் வெற்றியில்லை
களைகளை நீக்கினால் உயர்வாய்நீ!
221. - ஏர்முனை மூ.குழ. மூர்த்தி, மூலிமங்கலம்.

மதுவினால் மாய்ந்திடும் குடிகளைத்தன்
மதியினில் கொண்டிடா மடவரசு
மதுவினால் வந்திடும் வருவாய்க்கு
மதுவினை விற்றிடல் மாசாகும்!
222. - பு. சித்திரா, கரூர்.

பெருகிடும் மக்களின் பெருக்கத்தால்
உறைவிடம், ஊண்,உடை, பிறவசதி,
தரமிகு கல்வி,மேல் பணிபெறப் போய்க்
கரமதில் ஊட்டல் கையூட்டாம்!
223. - ச. தேன்மொழி, கரூர்.

கனிகளைக் கீரையைக் காய்களுடன்
இனியநல் தேனினை இயல்பாக
இனிதுநீர் உண்டிடின் இன்பந்தான்!
பிணிகளே இல்லைநல் பீடுறுவீர்!
224. - புலவர் மு. குறளகன், கரூர்.

வறுமையில் வாடிய எங்களுக்கு
வருதுயர் நீக்கவே வழியில்லை!
வறுமையைப் போக்கிட வேண்டுமெனில்
ஒருமுறை எங்களின் குறைதீர்ப்பாய்.
225. - தி. உருபன், மாரனோடை.

தனித்திருப் பின்முயற் சிஇருந்தால்
இனியஇப் பாரினில் உயர்ந்திடலாம்
மனிதனே உன்மனம் என்றென்றும்
தனித்துவம் வாய்ந்ததாம் உணர்ந்திட்டால்.
226. - கு. அம்மச்சி, ஆத்தூர்.

கடலலை பொங்கிடப் பெருந்துன்பம்
தொடர்மழை பெய்ததால் மிகுதுன்பம்
கடனறி தன்மையில் கட்டடங்கள்
திடமுடன் கட்டிடல் தீர்வாமே!
227. - சா. கண்ணன், புதுச்சேரி.

மதிமுகம் கொண்டமா தேவியுன்னை
கதியென பாவிகள் நெருங்கிவரின்
விதியினை மாற்றியே புகழ்என்னும்
பதியினை என்றுமே அருள்பவளே!
228. - இரா. அரிதாசு, திண்டிவனம்.

விழுப்புரம் போல்பல மாவட்டம்
தழைத்திடும் வேளையில் வருணன்தன்
பிழையினால் தீவுபோல் ஆக்கினனே!
அழித்திடும் ஊர்களைக் காத்திடுவோம்!
229. - ந. மோகனா, சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

தெருக்களில் ஒற்றுமை வளர்த்திடவே
வருணனைப் போல்பலர் வாழ்ந்திடவே
திருடனை நாட்டினில் ஒழித்திடவே
முருகனை யாவரும் வணங்கிடுவோம்.
230.- ம. செயலட்சுமி, சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

தனம்பல வாழ்வினில் கொண்டதாலே
கனம்என வாழ்வினை நினைத்திங்குத்
தினம்தினம் துன்பமே தொடருதம்மா
மனமதை எண்ணியும் உருக்குதம்மா.
231. - சு. இரேவதி, சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

திருமழை பொங்கிடும் மேகத்தில்
பெருமழை பொங்கிடக் காரணமேன்?
வருதுயர் மிகுந்திடும் காரணத்தால்
விருப்பமே உன்னிடம் அகன்றதன்றோ!
232.- இர. கிருட்டினகுமாரி, சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

www.padippakam.com



கலைபல உன்னுளே கொண்டவளே
சிலையென இங்கமர்ந் திருப்பவளே
நிலையிலா மக்களைக் காப்பவளே!
கலைதரும் உன்னருள் இங்கெமக்கு!
233. - இரா. அபிராமி, சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

இறைவனின் ஆசியால் உலகினிலே
திறம்படச் செய்கைகள் செய்திடுவோம்
அறமுடன் வாழ்க்கையில் வாழ்ந்திடுவோம்
பிறவியில் நன்மைகள் அடைந்திடுவோம்.
234. - சு. சிவசங்கரி, சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

அறிவியல் பாரினை உயர்த்திடுமே
அறிவியல் மக்களைக் காத்திடுமே
அறிவியல் சிந்தனை செய்திடுவோம்
அறிவியல் கற்றிட விழைந்திடுவோம்.
235. - மா.ப. இராணி, விழுப்புரம்.

அழிவிலாச் செந்தமிழ் ஆண்டிடும்நாள்
இழிவிலாப் பண்பினை ஏற்றிடும்நாள்
விழியிலா மாந்தனும் வழியறிவான்
செழிப்புறும் நம்தமிழ் நாட்டினிலே!
236. - புலவர் செ. இராமலிங்கன், புதுவை.

முளைத்ததோ கொம்புகள் எனக்கூவி
அலைந்திடும் பெண்களே அடங்குவீரே!
கலையுணர் வாழ்வினைக் காட்டியவர்
மலையுயர் மாண்பினர் தமிழர்கள்
237. - புலவர் சி.வெற்றிவேந்தன், பாகூர்.

அழகியே உன்கழுத் தில்மாலை
விழுகிற நேரமே எனக்குமாலை
மழையினில் வீழ்ந்தது கண்களழும்
இழப்பினால் உன்மனம் அமிழ்ந்திடவே!
238. - அ. வேங்கடபிரபா, திண்டிவனம்.

கலக்கமும் அச்சமும் கொண்டுகண்டு
விலக்கவும் ஏற்கவும் இயலாமல்
இலக்கெலாம் மாய்த்ததே பெருவெள்ளம்!
மலைக்கவே பேரிடர் சூழ்ந்ததம்மா!
239. - இலெ.அ. அகத்தியன், சிறுபிளை.

கருமுகில் சூழ்ந்தது; மின்னலிடி
பெருமுழக் கிட்டன; பெய்தமிழை
மறுகிட வைத்தது; வந்தவெள்ளம்
திருகிய மித்துயிர் விளைத்ததையோ!
240. - புலவர் அ. பொன்னையன், புலிகரம்பலூர்.

நினைவினில் வந்திடும் வல்சுவையே
உணவினில் ஏற்றிடும் என்நாவில்!
கனவினில் வாட்டிடும் ஏழிசையே
மனதினை ஏற்றிட வாராயோ!
241. - பெ. இளையராசா, சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

உயிரனை வாழ்வதன் உரிமைகளை
உயிர்ப்புற மண்மகள் துய்த்திடலை
எயினராய் ஆட்சியர் பறித்திடலால்
செயிர்ப்புறு மணமகள் வெகுண்டனளே!
242. - பொறிஞர் அகன், திருச்சி.

பறந்துநீர் வந்ததால் வந்ததுன்பம்
நிறைந்துநீர் நின்றதால் நீண்டதிங்கே!
குறைந்துநீர் போகுமோ போகாதோ?
நிறைந்துநீர் நின்றது விழிகளிலே!
243. - செ.அ. கார்க்குழலி, ஓடாக்கநல்லூர்.

துடிதுடி வாழ்வினில் நீஉயர!
படிபடி பல்வகை புத்தகத்தை!
தொடுதொடு பயன்விளை முகட்டினையே!
விடுவிடு சோம்பலை விரைந்தேநீ!
244. - தீ. தீபா திருமூர்த்தி, வி. புதுப்பாக்கம்.

கதர்க்கொடி ஏந்தியே போரிட்டுச்
சுதந்திர பாரதம் அளித்தவர்க்கு
மதத்தினை வேருடன் அழித்திடவே
மனிதநே யம்தொடர்ந் திடச்செய்வோம்.
245. - இரா. பிரபாவதி, சேலம்.

கனவினில் இன்புறும் அவளேஎன்
மனதினில் துன்புறும் இளமையெனின்
நினைவினில் ஏற்படும் காதலெல்லாம்
தினவினில் தோன்றிடும் மோதல்கள்!
246. - ந. சரவணன், சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

வனமதில் நாம்செயும் அழிசெயலால்
மனமதில் பூமகள் துடிக்கின்றாள்!
தினவுடன் சீறிடும் கடலலைதான்!
கனமழை வாழ்வினைக் கெடுப்பதுவே!
247.- கந்தகுமாரன்பாலு, காட்டுமன்னார்கோயில்.

எனையொரு தொண்டனாய் வாழவைப்பாய்
முனைந்துநான் நற்பணி யாற்றிடவே
இனியநல் நெஞ்சினை எனக்களிப்பாய்
இணையிலா ஏந்தலே என்முருகா!
248. - பொன். பசுபதி, புதுவை.

நிலையிலா வாழ்விது நினைவுகொள்ளாய்
கலைபல கற்பதால் மகிழ்வடைவாய்
பலருனை வாழ்த்திட வாழ்ந்திடுவாய்
உலகமே போற்றவே உருவெடுப்பாய்.
249. - ப. வனிதா, நெய்வேலி.

இருவிழி கொண்டெனை ஈர்த்துவிட்டாய்
ஒருமொழி இன்றியே உணரவைத்தாய்
விரைவினில் வந்துனை மகிழ்விப்பேன்.
திருமகள் நின்னையே மணமுடிப்பேன்.
250. - ப. நீலா, புதுவை.

www.padippakam.com



உழைப்பதே நன்றென உணரவேண்டும்
விழைவன நல்லதாய்த் தோன்றவேண்டும்
பிழையிலாச் செய்கையே புரியவேண்டும்
தழைத்திடும் நற்புகழ் சேர்க்கவேண்டும்.
251. - ப. பிரபாவதி, புதுவை.

இசைதரும் தேன்மொழி நம்தமிழாம்
விசையுடன் கற்றிட விரைந்திடுவீர்!
திசைதொறும் எட்டிடும் புகழ்மொழியை
இசைவுடன் ஏற்றுநீர் வளம்பெறுவீர்!
252. - கோ. வெற்றிச்செல்வி, சென்னை.

திருந்திய நற்றமிழ் நடையுடனே
விரும்பிடும் செந்தமிழ் எழுதிடுவோம்!
கரும்பெனத் தேன்தமிழ் பேசிடுவோம்!
இரும்பென இவ்வுரை இயம்பிடுவோம்!
253. - அ. கருப்பையா, திருச்சி.

திறமிலா மானிடர் திரிதலினால்
அறமிலா ஆட்சியும் நடக்கிறதே
அறத்துடன் மாண்பினை உடையவராய்த்
திறமுடன் ஆள்பவர் தமிழரன்றோ!
254. - ச. புட்பா, புதுக்கோட்டை.

நவச்சுவை நாட்டிய பேரழகோ!
உவவனம் தூங்கிடும் பூமகளோ!
தவத்திறம் பெண்ணை உருவெடுத்துப்
பவத்திறம் நீங்கிட உயிர்கொடுத்தாள்.
255.- க. கிருட்டிணமூர்த்தி, சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

நடமிடும் ஆண்மயில் நானாக
உடன்வரும் பெண்மயில் நீயாக
உடன்பட வாழ்ந்திட வருவாய்நீ!
நடிப்பிலா வாழ்வினைச் செய்வாய் நீ!
256. - து. நாகலிங்கம், சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

அருமையாய் அன்புடன் பார்ப்பவளே
கருமையாய்க் கூந்தலை உடையவளே
உருவமாய் உன்றனின் கண்களில்
பெருமையாய் என்னைநான் பார்ப்பேனா!
257. - இரா. முத்தையன், காவனூர்.

தெளிவுடன் நற்றமிழ் பேசிடுவோம்!
எளிதென நற்றமிழ் எழுதிடுவோம்!
துளியுமே நற்றமிழ் மறந்திடாதே!
பளிங்கென என்றுமே மிளிர்ந்திடுமே!
258. - சி. செந்தில், விழுப்புரம்.

தடுத்திட மக்களால் இயலவில்லை!
உடுத்திட ஆடையும் கிடைக்கவில்லை!
படுக்கையும் கூடவே மூழ்கியதே!
துடுப்பென யாரிவண் கரைசேர்ப்பர்?
259. - பாவை கண்ணதாசன், கூடுவாஞ்சேரி.

இளமையில் நூல்பல பயின்றிடுக!
இளைஞனே நிலையிலாப் பூவுலகில்
வளமுடன் வாழவே எந்நாளும்
உளமொடு நாடுக வடிவேலை!
260. - வீ. சிவபெருமான், விருத்தாசலம்.

நலம்பெற நாடுக தமிழ்நூல்கள்
நிலவரை நீள்புகழ் பெற்றிடவே!
இலக்கியம் கற்கவே ஏனென்றால்
உலகினில் செம்மொழி தமிழ்தானே!
261.- சி.ம. சிவஞானம், தி.கோ.அ.கலைக்கல்லூரி.

மதத்தினைச் சாதியைச் சார்ந்துவாழும்
மதத்தினர் சாதியர் தமிழரல்லர்
மதத்தினைச் சாதியைச் சார்ந்துவாழா
மதிப்பினர் மாண்புடைத் தமிழராமே.
262. - செ. இலிங்கானந்தபாரதி, நெய்வேலி.

கருநிற மேகமே, நீமண்ணில்
வருகிற ஓவியம் என்மஞ்ஞை
தருகிற இன்பமாய் என்நெஞ்சைக்
கரிக்குயில் வென்றதே காலத்தே!
263.- சு. தாண்டவமூர்த்தி, சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

திருக்குறள் நூலினைக் கைக்கொண்டே
வருமிடர் யாவையும் போக்கிடலாம்!
பெருமையைச் சொல்வதில் பயனில்லை
பொருளுணர்ந் தேயிதைப் போற்றிடுவீர்!!
264. - குறளேந்தி

உழைப்புதான் நற்றுணை உலகினிலே
உழைத்துயிர் வாழ்ந்திடு தயங்காமல்
உழைப்பினை ஆர்வமாய் நீகொண்டால்
தழைத்திடும் வையகம் உன்னாலே!
265. - ச. சீதாலட்சுமி, புதுவை.

கதிரிளம் சூட்டினில் திளைத்திடலும்
அதிமழைச் சாரலில் நனைந்திடலும்
மதிமகிழ் நூல்களைச் சுவைத்திடலும்
இதந்தரு வாழ்வென அறிந்திடுக.
266. - வே.ச. திருமாவளவன், புதுவை.

## வஞ்சி விருத்தம்-8 இல் அச்சில் சீராக அமையாத பாடல்கள்

அடைமழை பொழிந்ததால் நகரமெங்கும்
நடையிலாத் தெருக்களும் நலிவுகாணக்
கடைகளும் அடைத்ததால் இயல்புவாழ்க்கைத்
தடையுடன் சிதைந்ததே தமிழகத்தில்!
229.- கவிஞர் அரசு. ஈசுவரி இளங்கோ, புதுவை.

விழியினில் சுடரொளி ஏற்றிடுவாய்
தொழிலினில் நேர்மையைப் போற்றிடுவாய்
வழியினில் குறுக்கினைத் தவிர்த்திடுவாய்
பழியினை விரட்டியே வாழ்ந்திடுவாய்!
240. - சி. இளங்கண்ணன், கோலியனூர்.

www.padippakam.com



## பாடல் படைத்திடுக

வஞ்சி விருத்தம் - 10

தேடுவார் உழைப்பினால் உயர்பொருளை
வாடுவார் எவரெனக் கண்டறிவார்
ஓடுவார் அவர்களுக் குதவுதற்கே
ஈடிலாப் புகழினார் இன்னவரே

1. ஒவ்வோரடியிலும் மூன்று சீர்கள் இருக்க வேண்டும்.
2. ஓரடியின் சீரமைப்பு முறையே : கூவிளம்+கருவிளம்+காய்
3. இவ்வாறமைந்த நான்கடிகள் ஒரெதுகை பெற்றிருக்க வேண்டும்.

இவ்வாறமைந்த பாடல் ஒன்றை விரும்பிய பொருளில் இயற்றி, வரும் 31-12-05 க்குள் விடுக்க.

- புலவர் அரங்க. நடராசன்

## விடுபட்ட பாடல்

கருவிளம்+கருவிளம்+ காய்

அறிவொளி நிறைந்திட இருள்விலகும்
அறிவிலா நிலையினில் அழிவுமிகும்
செறிவுடன் இருப்பவர் செழித்திடுவர்
அறிவொளி பரவிடத் தினமுழைப்பர்.
283. - ச. அறிவலை, மதகடிப்பட்டு.

கனியிலா மரத்தினைப் போன்றவனாம்
கனிவிலா மனத்தினைப் பெற்றவனே!
கனவிலும் அவன்முகம் காணாதே
நனவிலும் அவனைநீ நினையாதே!
284. - கவிஞர் பா. விசயகுமார், சென்னை.

தரணியில் தமிழினம் பரவிடவே
தரமிகு தமிழனாய் விளங்கிடுவாய்?
முரசொலி முழக்கமாய் முடிங்கிடுவாய்!
அரசினர் நன்குனை அறிந்திடுவர்.
285. - க. இராசபேரிகை, திருச்சிராப்பள்ளி.

அடக்கமும் உழைப்புமே உயர்த்திடலால்
அடங்கிடற் கடங்கியும் முழங்கிடற்கு
முடங்கிடா உறுதியும் உடையவனாய்
தடந்தவ றிடாயென நெறிப்படுத்தே.
286. - பா. திருமதி, உளுந்தூர்ப்பேட்டை.

செறிவுறு கருத்தினால் அறிவுறுத்தல்
நெறியுடன் வசித்திடத் துணைபுரியும்
அறிந்தவர் முறையுடன் நடந்திடவே
குறியுடன் அருள்நெறி ஒழுகிடுவர்.
287. - ம. இளையாப்பிள்ளை, வீரசோழபுரம்.

தமிழனாய்ப் பிறந்தவன் தரணியெங்கும்
தமிழதைப் பரப்பிட முனைந்திடுவான்
அமிழ்தினை விருந்தெனப் படைத்திடலால்
தமிழ்நெறி தழைத்திட முயன்றிடுவான்.
288. - இரா. செகதீசன், இரிசிவந்தியம்.

## உலகத் திருக்குறள் வாழ்வியல் நெறிச் சங்கம் நடத்தும் திருக்குறள் கவிதைப் போட்டி

தலைப்பு : "தோற்றம் நிலக்குப்பொறை" என்னும் பொருள்

24 வரிகளுக்கு மிகாமல்,

அனுப்பும் நாள் : 31-12-2005

மூன்று பரிசுகள் வழங்கப்படும்.

முகவரி :

உலகத் திருக்குறள் வாழ்வியல் நெறிச்சங்கம்
எண். 11, 11-ஆம் தெரு, பூம்புகார் நகர்,
கொளத்தூர், சென்னை - 600 099.



# மணமக்கள் வாழ்க!



❖ தி.ஆ. உ0௩௬ கன்னி ௩0ஆம் நாள் (30-10-2005) புதுவைக் கதிர்காமம் திருவாளர் ப. சரவணன் - கசுத்தூரி இணையரின் மகன் செல்வன் ச. தமிழ்ச் செங்கோ, விழுப்புரம், கலியாணம்பூண்டி திருவாளர் சண்முகம் - ஆதிலட்சுமி இணையரின் மகள் செல்வி ச. வள்ளியம்மை ஆகிய இருவருக்கும் எல்லப்பிள்ளைச்சாவடித் திருமண மண்டபத்தில் திருமணம் சொல்லாய்வறிஞர் ப. அருளி அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

❖ 27-11-2005இல் புதுச்சேரி அரியாங்குப்பம் பொன். கிருட்டிணா விருத்தாம்பாள் திருமண நிலையத்தில் திரு. வீர. மோகன் - சு. பத்மாவதி ஆகிய மணமக்கட்கு வாழ்க்கைத் துணை நல ஒப்பந்தம் தோழர் கோவை கு. இராமகிருட்டிணன் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

❖ 28-11-2005இல் புதுச்சேரி செயராம் திருமண மண்டபத்தில் புதுவை, திரு. மு. பாலகிருட்டிணன் - இலலிதா இணையரின் மகன் செல்வன் பா. பாலபாசுகரன் சென்னை திரு அ. பெருமாள் - சுகுணா இணையரின் மகள் செல்வி சுபாசினி ஆகிய இருவருக்கும் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

மணமக்கள் எல்லா நலமும் வளமும் பெற்று வாழ நற்றமிழ் வாழ்த்துகிறது. - ஆசிரியர்.

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



## செந்தமிழ் வளர்க்கும் செய்திகள்

✤ புதுச்சேரி முலைக்குளம் பாரதி பல்கலைப்பேரவையின் சார்பில் ஐம்பெருவிழா தமிழ்மாமணி புலவரேறு **அரிமதி தென்னகனார்** தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. நூலாசிரியர் **பாரதி வாணர் சிவா** ஏற்புரை வழங்கினார்.

✤ 24-10-2005 திங்கள் காலையில் சென்னைப் பல்கலைக் கழகம் மெரினா வளாகத்தில் கலைமாமணி நூற்கடல் **தி.வே.கோபாலய்யரின் தமிழ் இலக்கணப் பேரகராதி (17 தொகுதிகள்) வெளியீட்டு விழா** பல்வேறு அரங்கமாகச் சிறப்பாக நடைபெற்றது.

✤ 23-10-2005இல் புதுச்சேரிக் கலை, பண்பாட்டுத் துறையின் சார்பில் கவிஞர் **புதுவைச்சிவம்** அவர்களின் பிறந்த நாள் விழா பல்வேறு நிகழ்வுகளாகச் சிறப்பாக நடைபெற்றது.

✤ 19-11-2005இல் கடலூர் மாவட்டம், தமிழகச் சிந்தனையாளர் பேரவையின் சார்பில் கடலூர் நகர் அரங்கத்தில் **விருது வழங்கல் மற்றும் இடஒதுக்கீடு கருத்தரங்கம்** சிறப்பாக நடைபெற்றது. **'சிந்தனையாளன்'** ஆசிரியர் தோழர் **வே. ஆனைமுத்து**, தோழர் **சங்கமித்திரா** ஆகியோர் பங்கேற்றுச்சிறப்பித்தனர்.

✤ ஆசிரியர் நலக்குழுவின் (1964) சார்பில் 20-11-2005 இல் புதுச்சேரி இராசா நகரில் கவிஞர் **பூங்கொடி பராங்குசம்** அவர்கள் கலைமாமணி விருது பெற்றதற்கான பாராட்டு விழா சிறப்பாக நடைபெற்றது. இணை இயக்குநர் **முத்துக் கிருட்டினன்** முனைவர் **இரா. திருமுருகனார்**, கலைமாமணி வில்லிசைப்புலவர் **இ. பட்டாபிராமன்** ஆகியோர் வாழ்த்துரைத்தனர்.

✤ 26-11-2005இல் புகழூர் வேலாயுதம்பாளையம் காந்தியார் மன்றத்தில் கருப்பண்ணன் செல்லம்மாள் இலக்கிய அறக்கட்டளையின் சார்பில் பாராட்டு பரிசளிப்பு நூல் வெளியீடு ஆகிய முப்பெருவிழா சிறப்பாக நடைபெற்றது.

✤ 13-11-2005இல் புதுச்சேரியில் பேராசிரியர் சுந்தர சண்முகனார் இல்லத்தில் பேராசிரியர் சுந்தர. சண்முகனாரின் எட்டாம்ஆண்டு நினைவு நாளும் பேராசிரியரின் **'மலர்மணம்'** நூலாய்வும் சிறப்பாக நடைபெற்றன. தமிழ்மாமணி புலவர் மு. **இறைவிழியன்** தலைமை ஏற்றார். முதுபெரும் புலவர் **ந. அப்பர்** நினைவேந்தல் உரை ஆற்றினார். கலைமாமணி புலவர் **பூங்கொடி பராங்குசம்** நூலாய்வு செய்தார்.

www.padippakam.com



# பாராட்டு விழா

❖ 19-11-2005இல் புதுச்சேரிப் பாகூரில் தமிழ்வளர்ச்சி நடவடிக்கைக்குழு (கிளை) தமிழர் நலக்காப்பணி, புரட்சிப் பாவலர் இலக்கியப்பாசறை ஆகியவற்றின் சார்பில் தமிழ்மாமணி விருது பெற்ற புலவர் மு. **இறைவிழியனார்க்குப்** பாராட்டு விழா திருவாளர் **பெ. வேணுகோபால்** அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

புலவர் **சி. வெற்றிவேந்தன்** வரவேற்புரை வழங்கினார். புலவர் **அரு. அப்பாசாமி** அவர்கள் வாழ்த்துரைத்துக் கேடயம் வழங்கினார். **பேரா. அன்னுசாமி** நினைவு உயர் நிலைப்பள்ளித் தலைமையாசிரியர் **அ. இருதயமேரி**, புலவர் **கி. அரியரன்** ஆகியோரும் ஆசிரியர் பெருமக்கள் பலரும் வாழ்த்துரைத்தனர்.

❖ 26-11-2005இல் புதுச்சேரி அரியாங்குப்பம், சிவலிங்கபுரத்தில் தந்தை பெரியார் பகுத்தறிவு இயக்கத்தின் சார்பில் தோழர் **உலோகு. ஐயப்பனார்** தலைமையில் நடந்த **எழுச்சி நாள் விழாவில்** தமிழ்மாமணி விருது பெற்றதற்காகப் புலவர் மு. **இறைவிழியன்** பாராட்டப் பெற்றார். அவரின் மாணவர் பலரும் பாராட்டுத் தெரிவித்தனர்.

## புதுவை முதல்வர் மாண்புமிகு ந. அரங்கசாமி பல்லாண்டுக் காலம் வாழ்தல் வேண்டும்

தாங்கள் பன்னெடுங்காலம் வளமாகவும், நலமாகவும் வாழ வேண்டும். "நற்றமிழ்" இதழ் வழி தாங்கள் உலகம் முழுவதும் தமிழ் செம்மொழி, ஈடு இணையற்றமொழி என்பதை அறியச் செய்து வருகிறீர்கள். தங்கள் நற்றமிழ் பணி மேலும் சிறந்து விளங்க விழைகிறேன். புதுவை மாநில முதலமைச்சர் மாண்புமிகு ந. அரங்கசாமி அவர்கள் புதுவை அரசின் உயர் விருதான "தமிழ்மாமணி" விருதைத் தங்களுக்கு வழங்கிச் சிறப்பித்துள்ளார்கள். புதுவை மாநிலத்தின் தலைவர் காமராசர் போன்று பயனுள்ள பணிகள் பலவும் செய்து வருகின்றார். தங்களுக்குத் தமிழ்மாமணி விருதினை அளித்ததன் வழி அம்மாமனிதர் தம்மை மேலும் உயர்த்திக் கொண்டார். உலகெலாம் பரவியுள்ள தமிழர்கள் அனைவரும் மாண்புமிகு முதல்வர் ந. அரங்கசாமி அவர்களை வாழ்த்தி வணங்குவார்கள். புதுவை மாநில முதல்வர் மாண்புமிகு ந. அரங்கசாமி அவர்கள் நற்றமிழ்ப் புலவர் பூங்கொடி பராங்குசம் அவர்களுக்கு இலக்கிய விருதான கலைமாமணி விருதினை வழங்கும் அரிய காட்சியும் நான்காம் பக்கம் அட்டையில் அழகாகப் பளிச்சிடுகின்றது. தமிழ்மாமணி புலவர் மு. இறைவிழியனார் அவர்கள் வாழ்க்கை வரலாற்றில் இந்நிகழ்ச்சிகள் ஒரு பொன்னேடு ஆகும். தக்காரை தக்கவாறு சிறப்பித்த புதுவை முதல்வர் மாண்புமிகு ந. அரங்கசாமி அவர்கள் பல்லாண்டுக் காலம் வாழவேண்டும்.

**- மணிஅரசு க. நாராயணசாமி, மதுராந்தகம்.**

படிப்பகம்

www.padippakam.com



# இறைவிழியனார்க்குப் பாராட்டு

'தமிழ் மாமணி' விருது பெற்ற தங்களுக்கு
மனம் நிறைந்த பாராட்டுக்கள்.

- முனைவர் அ.ம. சந்தியமூர்த்தி, கும்பகோணம்.

---

தங்களுக்குத் "தமிழ்மாமணி" தகுதி வாய்ந்த விருது கிடைத்தமைக்கு மிகவும் மகிழ்ச்சி.

எங்களது "பன்னாட்டுச் செம்மொழிச் செந்தமிழ்க் கழகம்" மற்றும் "தமிழர் பெருமை" இதழ் சார்பாக எங்கள் வணக்கங்களையும், வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் உவகை கொள்கிறோம்.

**- கவிச்சிற்பி "காற்று", கோவை.**

---

தமிழ்மாமணி விருது பெற்ற தமிழரின் தொண்டர் இன்னும் பல விருதுகள் பெற்றிட வேண்டுகிறேன். **- கோ. இளமுருகன், ஓலையூர்.**

---

அருந்தமிழ்த் தொண்டினை அயராது ஆற்றிவரும் தங்களுக்குப் புதுச்சேரி அரசு 'தமிழ் மாமணி' விருதளித்துப் பெருமை சேர்த்திருப்பது கண்டு எல்லையில்லா மகிழ்வெய்தினேன்.

"அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்"

இது தானே உலகின் ஒப்பற்ற புலவன் வழங்கிய வள்ளுவ நெறி. குறள் நெறியைக் குறைவில்லாமல் போற்றிக் காத்திடவும், செம்மொழி நிலையுற்ற தீந்தமிழைக் காத்திடவும் "நற்றமிழ்" இதழ் வழி தூய தொண்டாற்றிடும் தங்களுக்கு என் இதயமார்ந்த வாழ்த்துக்கள் தொடரட்டும் தொய்வில்லாத் தமிழ்பணியும், குறள்பணியும்.

**- தென்னிலை கோவிந்தன்.**

தாங்கள் புதுவை மாநில உயர் விருதான 'தமிழ் மாமணி' விருது பெற்றமைக்கு என் சார்பாகவும், என் கல்லூரி சார்பாகவும் மனமார்ந்த மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**- க. அன்புக்கோகிலா, மயிலம்.**

---

தாங்கள் புதுவை மாநில உயர் விருதான "தமிழ்மாமணி" விருது பெற்றமைக்கு மனமார்ந்த மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**- ஏ. சுமதி, ஏனதிரிமங்கலம்.**

www.padippakam.com



தாங்கள் பெற்ற தமிழ்மாமணி சங்கத் தமிழ்ப்புலவர்க்கு அளித்தது போல் எண்ணி உவந்தேன். வாழ்த்த முன் கூட்டியே இயலவில்லை. என் அன்பு உள்ளத்தை இயன்றால் நற்றமிழில் வெளியிடுங்கள் நற்றமிழ் சங்கத்து இலக்கிய இலக்கணம் போல் மகிழ்ச்சியை அளிக்கிறது.

- அ. பொன்னையன், புலிகரம்பலூர்.

---

புதுவைக் கலைபண்பாட்டுத்துறை தங்கட்குத் 'தமிழ்மாமணி' என்றும் (27.10.2005ஆம் பக்கலன்று) விருதை வழங்கிச் சிறப்புச் செய்துள்ளதைச் செவியுற்று பேருவகையடைந்தேன். விருது பெற்றுள்ள தங்களை நெஞ்சார வாழ்த்துகின்றேன்.

தமிழ்த்தாய்க்குத் தொண்டுசெய்துவரும் தங்கட்கு இன்னும் பல்வகை விருதுகள் கிடைக்கும் என்று நம்புகிறேன்.

- வீ. வில்வநாதன், பெங்களூர்.

---

பட்டங்களையும் பரிசுகளையும் பாராமல் பணியாற்றிய தங்களுக்குத் தகுதியான பரிசு. தங்களால் இவ்விருதுக்குப் பெருமை. வெல்க; பாராட்டுக்கள் - புலவர் சி. பரஞ்சோதி, விருகம்பாக்கம்.

---

தங்களுக்குப் புதுச்சேரி அரசு, சிறப்பு விருதான தமிழ்மாமணி விருது வழங்கிப் பாராட்டிச் சிறப்பித்தமை குறித்துப் பெருமகிழ்ச்சி யடைகின்றேன். தாங்கள் 'நற்றமிழ்' மூலம் நம் அருமைத்தாய் மொழியான இன்பத்தமிழைப்போற்றி வளர்த்து வருவதை வரவேற்ப துடன் பல்லாண்டு நீடுழி வாழ அன்புடன் வாழ்த்துகின்றேன்.

-ஆ.பழ. குமரப்பன், திருச்சிராப்பள்ளி.

## நற்றமிழில் வெளியான கலிவிருத்தப் பாடல்கள் வேலூரில் நூலாக்கம் பெறுகின்றன.

கலிவிருத்தப் பாடல்களை வேலூர் படைக்களப் பாவலர் துரை. மூர்த்தி அச்சிடும் பெறுப்பேற்றுள்ளார். என்னிடம் 25 பாவலர்கள் அச்சிடும் தொகை உரு.200/- வீதம் அனுப்பி உள்ளனர். பிறர் அவரிடம் தொடர்பு கொள்க. - இறைவிழியன்.

தொடர்பு முகவரி:
படைக்களப் பாவலர் துரை. மூர்த்தி
2-அ, கொல்லாபாளையம், ஆர்க்காடு - 632 503.

AIR MAIL
www.padippakam.com

நற்றமிழ்-திங்களிதழ்
NATRAMIZH-MONTHLY

பதிவு எண். புது.த.தி./2000/4265
Registration No. PONTAM / 2000 / 4265

அஞ்சல் உரிமம் : த.நா / அ.து.த 128 / 03-05. திங்கள் தோறும்
15 / 16ஆம் நாளில் நெல்லித்தோப்பு அஞ்சலகத்தில் சேர்க்கப்படுகிறது.
Postal registration : TN/PMG (CCR) 128/03-05. Posted
at NELLITHOPE POST OFFICE On 15th / 16th of Every Month.

அச்சிட்ட நூல் அஞ்சல் - Printed Book Post

LICENSED TO POST WITHOUT PREPAYMENT UNDER WPP
NO. SSP / PY / 83 / 03-05



பெறுநர் :
திரு.

**N. MURALY**
Dysse garden - 24, T.V,
7500 Holstebro,
**Danmark.**

# தமிழ்மா மணியே!

*அமிழ்தாகும் செந்தமிழை அன்போடு கற்ற*
*தமிழ்மா மணியாம்! தழைக்குந் – தமிழாம்!*
*உலகாண்ட நற்றமிழ்க்கே உற்றபணி செய்யும்*
*புலவர் இறைவிழியர், போற்று!*

- கவிஞர் **கி. பாரதிதாசன்,** தலைவர், கம்பன் கழகம், பிரான்சு.

| | | |
|---|---|---|
| தனி இதழ்க் கட்டணம் | — உரு | 6.00 |
| ஆண்டுக் கட்டணம் | — உரு | 75.00 |
| வெளிநாட்டு ஆண்டுக் கட்டணம் | — உரு | 300.00 |
| வாழ் நாள் கட்டணம் | — உரு | 600.00 |

திரு. ந. இளம்பூரணன் அவர்கட்கு உரிமையான 17, முதல் தெரு, இராசய்யர் தோட்டம், புதுச்சேரி - 605 013. இல் உள்ள அகத்தியர் அச்சகத்தில் அச்சிடப்பட்டு, நற்றமிழ் உரிமையாளரும் ஆசிரியருமான புலவர் மு. இறைவிழியனாரால் 43, அங்காடித் தெரு, நெல்லித்தோப்பு, புதுச்சேரி - 605 005. என்கிற முகவரியிலிருந்து வெளியிடப்படுகிறது.
தொலைப்பேசி : (0413) 2203765 கைப்பேசி : 98942-25129

Printed by **N. Elampuranan,** Owner of the press and published by **M. Iraivizhiyan** on behalf of **M. Iraivizhiyan** and printed at AHATHYAR PRESS, 17, First Street, Rajaiyer Thottam, Pondicherry - 605 013. and published at 43, Market Street, Nellithope, Pondicherry - 605 005. Editor **M. Iraivizhiyan,** Telephone : (0413) 2203765 **Cell : 98942 - 25129**